www.padippakam.com

# நற்றமிழ்





**தோள்கள் உடையவர்கள் ஒன்றுபடுங்கள்-புதுத்
தோற்றம் விழைபவர்கள் ஒன்றுபடுங்கள்**
*- அறிஞர் சாலை இளந்திரையனார்*

ஆண்டு-௫ திங்கள்-௫ தி.ஆ.௨௦௩௬ ஆடவை (ஆனி) (15-6-2005)

ஆசிரியர் : புலவர் மு. இறைவிழியன்

இணையாசிரியர்கள் : புலவர் அரங்க. நடராசன், புலவர் செ. இராமலிங்கன்

## நேரிய தமிழ்ப் பற்றாளர் அண்ணல் தங்கோ



நேரிய தமிழ்ப்பற் றாளர்,நெஞ்செலாம் தமிழைப் போற்றிப்
போரிடத் தயங்கா "அண்ணல்", புரட்சியே அன்னார் உள்ளம்,
சீரிய முறையில் நல்ல செந்தமிழ்ப் பெயரைச் சூட்டி
மாரியாய்த் தமிழ்த்தொண் டாற்றி மகிழ்ந்தவர் வழிச்செல் வோமே!

— புலவர் செ. இராமலிங்கன்

வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு.

-பாரதியார்

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள தமிழர் ஒன்றாதல் கண்டே!

-பாவேந்தர்

இலக்கிய இலக்கணத் திங்களிதழ்

விலை உரு 6.00

படிப்பகம்

www.padippakam.com



# பெயர் மாற்றத் தந்தை அண்ணல்தங்கோ

இந்திய விடுதலைப் போராட்ட வீரர், தன்மான இயக்கத் தொண்டர் தமிழ்மொழிக் காவலர், திருக்குறள் அடியார் எனப் பலமுகங்களைக் கொண்ட பச்சைத்தமிழர் அண்ணல்தங்கோ.

1904ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 12 ஆம் நாள் கு.மு.அண்ணல் தங்கோ பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் சாமிநாதன். அது வட மொழிப் பெயராதலின் 1936இல் அண்ணல்தங்கோ என்ற தமிழ்ப் பெயரைச் சூட்டிக் கொண்டார்.

1923இல் கள்ளுக்கடை மறியலணித் தலைவராகி மதுரையில் மறியல் செய்து மூன்று மாதங்கள் சிறைப்பட்டார்.

1937ஆம் ஆண்டில் அண்ணல்தங்கோ உலகத் தமிழ் மக்கள் தற்காப்புப் பேரவையைத் தொடங்கினார். 1937 இலிருந்து தம் வாணாள் இறுதிவரை ஆண்டு தோறும் தமிழர் திருநாள் தமிழர் நிலப்பெரு விழாவைத் தைத்திங்களில் நடத்தினார்.

இந்தியெதிர்ப்புப் போரில் உயிர் நீத்த நடராசன் இறுதி ஊர்வல முடிவில் ஆல்பர்ட்டு சேசுதாசு தலைமையில் அண்ணா, அண்ணல் தங்கோ, பொன்னம்பலனார், மருத்துவர் தருமாம்பாள் போன்றோர் உரையாற்றினர்.

1942இல் 'தமிழ் நிலம்' என்ற செய்தி ஏட்டினைத் தொடங்கினார். தமிழ் மொழியின் தொன்மை பற்றியும் திருக்குறள் பெருமை குறித்தும் பல்வேறு கட்டுரைகளை வெளியிட்டுத் தனித்தமிழ் முழக்கஞ் செய்தார்.

தமிழர் தம்மைத் தமிழர் என்றே குறித்திடல் வேண்டும் என்று உறுதியாய்ப் போராடிய அண்ணல் தங்கோ அவர்கள் 1944ஆம் ஆண்டு நயன்மைக் கட்சியின் பெயரைத் திராவிடர் கழகம் என மாற்ற வேண்டும் என அண்ணாத்துரை வாயிலாகப் பெரியார் தீர்மானம் கொண்டு வந்தபோது கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களோடு சேர்ந்து தமிழர்கழகம் எனப் பெயரிட வலியுறுத்தினார். பின்னாளில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் அண்ணலாரை இணைத்திட வேண்டுமென அண்ணா முயன்ற போது திராவிடர் என்பதைத் தமிழர் என்று மாற்றிக்கொண்டால் தாம் இணைவதில் தடையில்லை என்று மறுத்தார்.

தமிழக எல்லைக்காப்பு மாநாடு, தமிழ்நாடு பெயர் அமைப்பு மாநாடு நடத்தித் தமிழ் நிலத்தை மீட்க முழங்கினார். தமிழ்ப் பெயரில்லாத தமிழினத் தலைமக்களுக்குத் தமிழ்ப்பெயர் சூட்டி அழைப்பதைத் தம் வழக்கமாக்கிக் கொண்டார். இன்றைய தமிழ்த் தேசிய வேட்கையின் வெளிப்பாடாக அன்றே விளங்கிய அண்ணல் தங்கோ அவர்கள் 1974 ஆம் ஆண்டு சனவரித்திங்கள் நான்காம்நாள் மாலை மறைவுற்றார். அவரின் நூற்றாண்டாகிய இவ்வாண்டில் அவர்தம் கொள்கைகள் வலுப்பெற்று வளர்ந்து வருவதை எண்ணி மகிழ்ந்து இலக்கினை அடையும் வண்ணம் உழைக்க உறுதியேற்போம்.

- நன்றி. தமிழியக்கம். பிப்பிரவரி - மார்ச்சு 2005

படிப்பகம்

www.padippakam.com



# பெருங்கதையும் சீவகசிந்தாமணியும்

கலைமாமணி நூற்கடல் தி.வே. கோபாலய்யர் (தொடர்ச்சி)

மண்டலம் நிறைந்த மாசில் மதிப்புடை வியாழம் போன்று ஓர்
குண்டலம் இலங்க நின்ற கொடியினைக் குறுகித் தோழி
- சீவக. 618

10. எதிர்பாராத மகிழ்ச்சிக்கு உயர்த்திய கையிலே தொடி தானே வந்து விழுதல் உவமை

அண்ணல் மருங்கின் ஆவது வேண்டும்
தன்மனம் உவந்தது தலைவர நோக்கி
ஏற்ற முன்கைத் தொடிவீழ்ந் தற்றால்
கோற்றொடி கொண்ட கொள்கைஎன்று ஏத்தி
- பெருங். 1-36-117-120

ஏற்ற கைத்தொடி வீழ்ந்தென ஏந்தலைத்
தேற்றினான் - சீவக. 1979

இனி, நாட்டுநடப்பில் காணப்பட்ட வழக்கங்கள் இயற்கைப் பொருள் செயற்கைப்பொருள் வருணனைகள் பற்றிப் பெருங்கதையைப் பின்பற்றிச் சீவகசிந்தாமணி குறிப்பிடும் சில செய்திகளை நோக்குவோம்.

1. கஞ்சியிடப்பட்ட ஆடைக்கு நறுமணத்திற்கு அகிற்புகை ஊட்டல்.

பள்ளி மாடத்துப் பருஉச் சுடர்கொளீஇக்
காடி கலந்த கோடிக் கலிங்கம்
கழும ஊட்டும் காழ்அகில் நறும்புகை
முழுநிலா மாடத்து முடிமுதல் தடவ - பெருங். 1-57-54-6

காடி உண்ட பூந்துகில் கழும ஊட்டு பூம்புகை
மாட மாலை மேல்நலார் மணிக்குழலின் மூழ்கலின் - சீவக. 71

2. குறைந்த அளவு ஏழடி நடந்துசெல் மரபு.

நோய்கொண்டு கறுக்கும் ஆய்மலர்ச் சேவடி
ஏழடி இடுதல் ஆற்றாது ஆயினும் - பெருங். 1-53, 131-132

தழுமா வலிமைந் தளனத் தளரா
எழும் ஏழடி ஊக்கி நடந்துசெலா
விழும் - சீவக. 1384

3. விளைக பொலிக எனும் மங்கலம் கூற்று.

கொப்புறு நெஞ்சினைத் திட்பம் கொண்டு
விளைக பொலிக வேந்தன் உறுகுறை
களைகுவன் இன்றெனும் கருத்தொடு புலம்பி
- பெருங். 4-13. 142-144

விளைக பொலிக அஃதே உரைத்திலம் வெகுள வேண்டா
- சீவக. 260

www.padippakam.com



நத்தொக நள்ளி நடைஇறவு வயவாளை
வித்தி அலையில் விளைக பொலிக என்பார் - பரிபாடல் - 10-85-86
என்ற அடிகளும் இவ்வழக்கத்தை வலியுறுத்தும்.

4. காவலர் செந்நிறம் ஊட்டப்பட்ட கோலை ஏந்தியிருத்தல்

பொன்தலை யாத்த பொதியில் பிரம்பின்
வண்ணச் செங்கோல் வலவயின் பிடித்த
எண்ணூற் றறுவர் இளங்கிடை காப்பரொடு - பெருங். 1-37-9-11
கோள்நினை குறித்து வந்தான் கட்டியங் காரன் என்று
சேண்நிலத்து இறைஞ்சிச் சொன்னான் செய்யகோல்
வெய்யசொல்லான் - சீவக. 264

5. அறுகம்புல்லில் நெய்யைத் தோய்த்து மங்கலமாகத் தலையில் தவுதல்.

நெய்தலை பெய்தற்கு எய்திய சிறப்பணி
ஏந்திய சென்னி மாந்தர் கூடி
அறுகைப் புல்லினும் வாகைத் தளிரினும்
நறுநெய் தோய்த்து முறைமுதல் நீவி - பெருங். 2-5-67-70

இழைத்தபொன் நகரின் வெள்ளி இடுமணை மன்னர் ஏந்தக்
குழைப்பொலிந்து இலங்கு காதின் கொற்றவன் இருந்த பின்றை
மழைக்கவின்று எழுந்த வார்கொள் மணிநிற அறுகை
நெய்தோய்த்து
எழிற்குழை திருவில் வீச மகளிர்நெய் ஏற்றுகின்றார் - சீவக. 2416

- (தொடரும்)

---

# மணமக்கள் அரு. முத்துக்குமரன் - சுதா வாழ்க!

தி.ஆ. உ0ஙகூ விடை அ ஆம் நாள் (22-05-2005) அந்தாதி அன்பரும் தமிழாசிரியருமான **மா.தன. அருணாசலம் - புட்பா** இணையரின் மகன் செல்வன் **அ. முத்துக்குமரன்**, இலிங்காரெட்டி பாளையம் இல. **சுந்தரம் - திரிபுரசுந்தரி** இணையரின் மகள் செல்வி. **சு. சுதா** ஆகிய இருவருக்கும் புதுச்சேரி மங்கலட்சுமி திருமண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமண விழாவிற்கு வந்த சான்றோர் அனைவருக்கும் அந்தாதி அருவி **மா.தன. அருணாசலம்** அவர்கள் எழுதிய **'இயற்கையோடியைந்த வாழ்வுத்திருமணச் சடங்குகள் - சிறு விளக்கம்'**. என்ற நூல் வழங்கப் பெற்றது. மேலும் 'நற்றமிழ்' இதழின் வளர்ச்சிக் கொடையாக உரு இருநூறும் (உரு 200/-) வழங்கப்பெற்றது.

மணமக்கள் எல்லா நலனும் வளனும் பெற்றுவாழ நற்றமிழ் வாழ்த்துகிறது.

- ஆசிரியர்.

www.padippakam.com



## அறவிலக்கியம் | தமிழ்நூல் மரபும் வடநூல் வழக்கும்

முனைவர் ப. மருதநாயகம், இயக்குநர்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம். (தொடர்ச்சி)

நான்மணிக்கடிகையும் நாலடி, பழமொழி போன்று நான்கு வரிப் பாடல்களைக் கொண்டதாயினும் அதற்கென்று ஒரு தனித்தன்மை இருக்கின்றது. ஒவ்வொரு பாடலும் கூறும் நான்கு பொருள்களும் ஒப்புமையாலோ, வேறுபாட்டாலோ, உவமையாலோ தொடர்புபடுத்தப் பெற்று ஒரு கருத்து வலியுறுத்தப் பெறுகின்றது. கூறப்படும் பொருள்கள் நான்கனுள் மூன்று மற்றதற்கு உவமைகளாதலும் உண்டு. பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை, சான்றோர் எக்குடியிலும் பிறக்கலாமென்ற கருத்தை

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; மான் வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும் - பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார் யார்
நல்ஆள் பிறக்கும் குடி? (நான்மணிக்கடிகை : 4)

என்று எடுத்துச் சொல்வார்.

இம்மூன்று உவமைகள் ஒன்றோடொன்று உறவு பெற்றும் விளங்கலாம்.

போதினால் நந்தும் புனை தண்தார்; மற்றதன்
தாதினால் நந்தும் சுரும்பெல்லாம் - தீதில்
வினையினால் நந்துவர் மக்களும்; தத்தம்
நனையினால் நந்தும் நறா. (நான்மணிக்கடிகை 43)

இக்கவிதை "மலர்களால் மாலைசிறக்கும்; மலரின் தேனால் வண்டு சிறக்கும்; தேன் அது தோன்றிய மலரால் சிறக்கும்; அதுபோல் நற்செயல்களால் மாந்தர் சிறப்பர்" என்று கூறும்போது மலரையும் தேனையும் வண்டையும் உவமைகளாக்கிக் கவிதைநயத்தைக் கூட்டுகிறது.

இரண்டு, மூன்று, நான்கு வரிகளாலான பாடல்களிலும் கூட நகை, அச்சம், குறும்பு, ஏளனம், சினம், வீரம், அருவருப்பு, முரண் ஆகிய சுவைகளுக்கு இடம்தந்து பழிப்பதுபோல் புகழ்தல், புகழ்தல்போல் பழித்தல், உயர்வுநவிற்சி, குறைத்துக்கூறல், கெஞ்சிக்கேட்டல், மிரட்டியுரைத்தல், அச்சுறுத்தல், எச்சரித்தல் போன்ற முறைகளை யெல்லாம் மேற்கொள்ளவும் இப் புலவர்களால் முடிகிறது. சொற்சிக்கனத்தை வியத்தகு முறையில் கையாளும் இவர்கள் அடுக்குத் தொடர்களையும் வேண்டியவழி பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நின்றன நின்றன நில்லா என உணர்ந்து
ஒன்றின ஒன்றின வல்லே செயிற் செய்க;

www.padippakam.com



சென்றன சென்றன வாழ் நாள், செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று! (நாலடியார் : 4)

"நிற்கும் என்று நீ நினைக்கும் செல்வமெலாம் நில்லாது போய்விடும் என்பதையும் இறப்பு உறுதியாக விரைவில் வந்து கொண்டிருக்கிறதென்பதையும் உணர்ந்து விரைந்து அறம் செய்க" என்று கூறும்போது விரைவுணர்வை ஏற்படுத்த இறந்தகால வினைகளும் அடுக்குத் தொடர்களும் அழகுறப் பொருத்தமாக வந்து விழுகின்றன.

பின்னால் தோன்றிய பெருங்காப்பியங்கள் நீதிநூல் தொடர்களையும் வரிகளையும் எடுத்தாள்வதைக் குறையாகக் கருதவில்லை.

இப்புலவர்கள் மூலத்தை மறைக்க முயலாமல் கடன் பெற்றதற்கு மேலும் மெருகூட்டும் முயற்சியில் ஈடுபட்டுச் செய்யும் மாற்றங்கள் நோக்குதற்குரியவை. இம்மரபு இவர்களின் கவியாற்றலையும் அதில் அவர்கள் கொண்டிருந்த தன்னம்பிக்கையையும் காட்டும். "கூற்றம் புறம் கொம்மை கொட்டினாரில்" என்பது பழமொழி. இதனைப் பழமொழி நானூறு

ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க
போற்றாது கொண்டரக்கன் போரில் அகப்பட்டான்;
நோற்ற பெருமை உடையாரும் கூற்றம்
புறங் கொம்மை கொட்டினா ரில் (பழமொழி : 126)

என விளக்கும். "கூற்றத்தை அதன்பின்னே நின்று கைகொட்டி வலிய அழைப்பவர்கள் யாருமிலர். இதனை உணராத அரக்கன் பெரும்பகை தேடி, போரில் மாண்டான். மிகவும் பெரியவர்களுடைய பகையை விரும்பி மேற்கொள்ளல் ஆகாது" என்பது இதன் பொருள்.

- (தொடரும்)

---

# கருத்தரங்கம்

தொல். நூற்பா 426 அல்வழியைச் சொல்லுமிடத்து ஆறு ஈற்றுக்குற்றியலுகரமும் இயற்கையாக முடியும் என்று கூறுவதால் பாக்கு பொடியானது, கொக்கு கடிது, கொக்கு பெரிது என இயல்பாகவே புணர வேண்டும். தொல்காப்பிய உரைகாரர் 409 ஆவது நூற்பாவுக்கு கொக்குக்குறிது. பட்டுப்புழு என்ற எடுத்துக்காட்டுகளைத் தந்துள்ளார். இவற்றில் 'கொக்குக்குறிது' என்ற எடுத்துக்காட்டு தவறு. 'பட்டுப்புழு' என்ற எடுத்துக்காட்டு சரி.

'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்துமிகுமே' (426) (427 என இதழில் உள்ளது) என்ற நூற்பாவுக்குத் தந்துள்ள கொக்குப் பறந்தது என்ற எடுத்துக்காட்டு சரியன்று. கொக்குக் கடிது, கொக்குப்பெரிது என்பன தவறு. (வல்லொற்று மிகுந்திருப்பது தவறு)

- புலவர். மாசிக் மகிழ்நன்

www.padippakam.com



# ஆழிப் பேரலை

புலவர் நா. தண்டபாணி, அம்பல்.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"
"விரிதிரை வந்து வியன்நகர் விழுங்க
ஒருதனி போயினன் உலகமன்னவன்"

என்னும் இலக்கியஅடிகள் முறையே குமரிக்கண்டமும் சோழர் தலைநகர் பூம்புகாரும் கடற்கோள்களால் அழிந்த கொடுமையையும் அவலத்தையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. இங்ஙனம் இன்னும் இலக்கியங்களில் பலவிடங்களில் கடற்கோள்களின் கொடுமை பேசப்படுகின்றது. அவலச்சுவையும் ஏக்கமும் இவ்வடிகளில் அமைந்து நம்மை மனங்கொதிக்கச் செய்கின்றன.

'மலிதிரை ஊர்ந்துதன் மாக்கடல் வெளவலின்' என்னும் கலித்தொகை அடியும் இவற்றிற்குத் துணைசெய்கின்றது. இவ்வாறெல்லாம் கடல் அலைக்கொடுமையால் பண்டைத் தமிழகம்,

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறுநல்லுலகம்' என்னும் அளவில் சுருங்கிவிட்ட கொடுமையை உணர்கின்றோம்.

குளம், ஏரி, ஆறு முதலியவற்றின் அலைகளைவிடக் கடலின் அலை இயல்பாகப் பெரியதுதான். ஆயினும் நிலநடுக்கம், புயல், பெருமழைக்காலங்களில் கடல்அலை மிகமிகப் பெரியது. அத்தகைய பேரலையால்தான் நாடும் ஊரும் நற்றமிழ்நூல்களும் அழிந்தன.

'ஏரணம்' எனத் தொடங்கி 'வாரணம் கொண்டது அந்தோ வழிவழிப் பெயருமாள' என முடியும் பழம் பாடல் மறைந்துபோன பழந்தமிழ்ப் பனுவல்வகைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றது. அவையெல்லாம் அழியாமல் முழுமையாக இருந்தால் தமிழக வரலாறு செழுமையுடன் இன்று திகழும்; தமிழ்ப் பண்பாட்டு எதிரிகள் இன்று வாயடங்கியிருப்பர்.

இன்று நிலநடுக்கமும் ஆழிப்பேரலையும் 26-12-2004 இல் ஐம்பெரும் தீவுகளுள் (கிழக்கிந்தியத் தீவுகளுள்) ஒன்றாகிய சுமத்திராவில் தொடங்கினாலும் பண்டையகாலத்திலிருந்து கணக்கிட்டால் ஆழிப்பேரலை தமிழகத்திற்குச் செய்த கொடுமைபோல் வேறுநாடுகட்குச் செய்ததில்லை.

நம் பழையநூல்கள் மலிதிரை, விரிதிரை என்று குறிப்பிடுவன, ஆழிப் பேரலைகளையே! அதனை இன்று 'சுனாமி' என்னும் பெயரால் நாளிதழ்களும் சிற்றிதழ்களும் தொடர்ந்து குறிப்பிடுகின்றன. மலிதிரை, விரிதிரை, ஆழிப்பேரலை என்று அதனைக் குறிப்பிட மனம் இல்லை;

www.padippakam.com



'சுனாமி' என்பது சப்பானியமொழிச்சொல் எனக் கூறப்படுகின்றது. அந்த அயன்மொழிச்சொல்லால் குறிப்பிட்டால்தான் ஒருவகை மனநிறைவு இவ்விதழ்கட்கு ஏற்படும்போலும். இதுவும் ஒருவகைத் தாழ்வு மனப்பான்மையே! இஃது என்று நம்மைவிட்டு நீங்குமோ?

ஆழிப் பேரலையில், - விரிதிரையில், - மலிதிரையில் காணாத சிறப்பினை நாம் 'சுனாமி'யில் கண்டுகொண்டிருக்கின்றோம். 'நாமே நமக்குத் துணை' ஆவதெப்போது?

'ஓர் இதழ் - தமிழ்இதழ் 'சுனாமி' என்னும் பெயரை எங்கள் இதழ்தான் முதன்முதல் பயன்படுத்தியது' எனப் பெருமிதத்துடன் பேசுகின்றது. இஃது ஒரு செயற்கரிய செயலா? நற்றமிழ்ச்சொல் ஒன்றையோ, ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ முதன் முதலில் அறிமுகப் படுத்தினால் அது சிறப்புக்கு உரியது. - (தொடரும்)


# நன்னன் அண்ணல் நினைவுப் பரிசுப் போட்டிகள்

தி.பி. 2037 (கி.பி. 2006)

## பாவும், சிறுகதையும்

பரிசுத் தொகை : நாற்பதாயிரம் உருவா (ரூ. 40,000)

பாவும், சிறுகதையும் ஆகிய இரு போட்டிகளுக்கும் உரிய தனித் தனிப் பரிசுகளாவன :

முதற் பரிசு : பத்தாயிரம் உருவா (ரூ. 10,000)

இரண்டாம் பரிசு : ஆறாயிரம் உருவா (ரூ. 6,000)

மூன்றாம் பரிசு : நாலாயிரம் உருவா (ரூ. 4,000)

1. இப் போட்டிகளிற் கலந்துகொள்ள விரும்புவோர் தம் விருப்பத்தை எமக்குத் தெரிவிப்பதன் வாயிலாகத் தம் பெயரைப் பதிவு செய்து கொள்க.
2. அவ்வாறு தெரிவிக்கும்போது, அவர்கள் அதனுடன் தம் முகவரி எழுதப்பட்டதும், அய்ந்து உருவா அஞ்சல்வில்லை ஒட்டப் பட்டதுமாகிய உறை ஒன்றையும் சேர்த்தனுப்பினால் போட்டி களுக்குரிய முழு விவரங்களும், விதிமுறைகளும் அவர்களுக்கு அனுப்பப் பெறும்.
3. 10-7-2005-க்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

எம் முகவரி :

**நன்னன்அண்ணல் நினைவுப் பரிசுப்போட்டிகள் தி.பி. 2037**

'சிறு குடி', 22 அய், முதல் தெரு, அரங்கராசபுரம், சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தொ.பேசி : 22350193.

www.padippakam.com



வேலாயுதம்பாளையம்

கருப்பண்ணன் - செல்லம்மாள்

# இலக்கிய அறக்கட்டளை

## எட்டாம் ஆண்டு இலக்கியப் போட்டிகள்

**போட்டிக்கு அனுப்ப வேண்டிய கவிதைக்குரிய தலைப்பு**

**"அன்னைத் தமிழ் காக்க ஆர்த்தெழு!"**

என்னும் தலைப்பில் 24 அடிகளுக்கு மிகாமல் எந்தப்பா இனத்திலாயினும் கவிதை ஒன்று எழுதி அனுப்புக. கவிதை முழு வெள்ளைத்தாளில் தெளிவாக எழுதி அல்லது தட்டச்சு செய்து இரண்டு படிகள் அனுப்பவேண்டும். போட்டிக்கு அனுப்பப்படும் கவிதைகளை நூலாக்க அறக்கட்டளைக்கு உரிமையுண்டு. சிறந்ததாகத் தேர்வு செய்யப்படும் கவிதைக்கு முதல்பரிசாக ஆயிரம் வெண்பொற்காசுகளும், இரண்டாம்பரிசாக ஐந்நூறு வெண்பொற் காசுகளும் பரிசளிக்கப்படும்.

## கவிதை நூல் போட்டி

2003-ல் தொடங்கி இன்றுவரை வெளிவந்த அச்சிட்ட கவிதை நூல்கள் எழுதிய ஆசிரியராலோ, அல்லது வெளியிட்ட பதிப்பகத் தாலோ அனுப்பி வைக்கப்படலாம்.

- நூல்கள் இரண்டு படிகள் அனுப்பப்பட வேண்டும்.
- கவிதைகள் எந்தப் பா இனத்திலேனும் அமைந்திருக்கலாம்.
- மரபுக் கவிதைகளாக இருக்க வேண்டும்.
- சிறந்த கவிதை நூலுக்கு ஆயிரத்து ஐந்நூறு வெண் பொற்காசுகள் பரிசளிக்கப்படும்.

பரிசுகள் 2005 தமிழகப் பெருவிழாவின் போது வழங்கப்படும்.

நூல்களும், கவிதைகளும் இரண்டு படிகள் வந்து சேரவேண்டிய

**கடைசி நாள் 10-09-2005**

*கவிதைகள், கவிதைநூல்கள் அனுப்ப வேண்டிய முகவரி :*

**க. துரையரசன்**

23, கலையகம், முல்லை நகர்,

வேலாயுதம்பாளையம் - 639 117, கரூர் மாவட்டம்.

www.padippakam.com



# நற்றமிழ்க்கு வந்த நன்மடல்கள்

கால்டுவெல் அயர்லாந்து நாட்டினராயிருந்தும் நம் தமிழைக் கற்றுப் பன்மொழிப்புலமையும் பெற்றுத் தமிழுக்குழைத்ததை பாராட்டத்தான் வேண்டும். 'தத்தை' நற்றமிழ்ச் சொல்லாயிருக்க அதனை இந்திவழி வந்ததெனப் பல்கலைக்கழகப் பேரகராதி பதித்திருப்பது இருட்டடிப்பு என்பதுடன் வேதனைக்குரிய செய்தி. ல, ள, ழ; ர, ற; ண, ந, ன எழுத்துக்களை உச்சரிப்பதில் ஏற்படுகின்ற பிழைகளைத் திருத்திக் கொள்ளும் வண்ணம் படத்துடன் இறையரசனார் விளக்கியுள்ள பாங்கு இன்றைய இளஞ்சிறார்களுக்குக் கைகொடுக்கும்.

**- புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி.**

நற்றமிழ் 15-5-2005 வைகாசி இதழில் தத்தை - சொல் ஆராய்ச்சி சிறப்பானதாகும். தமிழ் மிகவும் இயல்பாக ஒலிக்கக் கூடிய இனிய மொழி.- பக்கம் (எ) 7

'தமிழாசிரியர்களுக்கு வேண்டுகோள்' என்ற பகுதியைத் தொடங்கிட வேண்டுகிறேன். தமிழ்நாட்டின் இருபத்தொன்பது மாவட்டங்களிலும் உள்ள தமிழாசிரிய சங்கத்தாரின் முகவரிகளைப் பிறரிடம் கேட்டு நான்கு மாவட்டமாகவோ அல்லது இடவசதியைப் பொறுத்தோ வெளியிட அன்புடன் வேண்டுகிறேன். விருப்பம் உள்ளவர்கள் அவர்களிடம் தொடர்பு கொள்ள உதவியாய் இருக்கும்.

**- சு. அருண் பாண்டியன், திருவைகுண்டம்.**

அடுத்தவிதழின் 'பாடல் படைத்திடுக' தலைப்பினை அனைத்துப் பாவலர்களும் வேண்டிய தலைப்புகளில் பாடல்கள் எழுதாமல் தமிழ்த்தாயை வேண்டுதலாகவோ, இறைஞ்சுதலாகவோ, போற்றுதலாகவோ எழுதுமாறு கட்டளையிடக் கேட்டுக் கொள்கிறேன். தமிழை வழிபடுபொருளாகக் கடைபிடித்து வரும் என்போன்றார்க்கு நம் 'நற்றமிழ்'ப் பாவலர்களின் பாடல் தொகுதி நல்ல வழித்துணை யாகுமெனத் தெரிவித்துக் கொள்கிறேன். **- வானவன், வெங்காலூர்.**

திருக்குறள் மூலநாதனின் மடல் படித்துப் பெரிதும் மனம் மகிழ்ந்தேன். தயாபரனின் தமிழ்த்தொண்டுதான் உண்மையான தமிழ்த்தொண்டு! தமிழரில் பெரும்பாலர் தமிழில் கையொப்பம் இடுவதில்லை. தலைப்பு எழுத்தும் தமிழில் இருப்பதில்லை. 3000 பேருக்குத் தமிழ்ப்பற்று ஏற்படுத்திய அவரின் தமிழ்ப்பணியை எண்ணி வியக்கிறேன்!

மலேசியாவில் தமிழ் என்ற செய்தி மகிழ்ச்சி தந்தது! நமது தமிழக அரசு செய்யத்தவறியதை அயல்நாட்டுஅரசு செய்ய முன் வந்துள்ளது வரவேற்கத்தக்கது. தமிழர்கள் இங்கே ஆளும்போதே தமிழுக்கு எந்த ஏற்றமும் இல்லை! இந்த ஆட்சியால் எங்கே தமிழுக்கு முன்னேற்றம் இருக்கப் போகிறது? **- நாத்திக நந்தனார், ஓட்டேரி.**

படிப்பகம்

www.padippakam.com



நற்றமிழ் - வைகாசி 15-05-2005 இதழின் கடைசிப்பக்கச் செய்தியில், திரு. திருமூலநாதன் மடல் மிகப் பெரிய தமிழ்ப் பணியைத் தமிழ்கூறும் நல்உலகிற்கு வழங்கியுள்ளது. பல தமிழ் ஆசிரியர்களும் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சியர்களிடம் தமிழ் வளர்ச்சிக்காக முறையிட வேண்டும் என்று வேண்டுகிறேன்.

**- அ. வியனரசு, ஆழ்வார்திருநகரி.**

யாழ்ப்பாணத்தில் மருத்துவப் படிப்பே தமிழில் சொல்லிக் கொடுக்க முடிகிறது என்றால் தமிழால் எல்லாம் முடியும் என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? **- மணி, திருவனந்தபுரம்.**

நற்றமிழ் இதழுக்கும், நல்ல தமிழ்த்தொண்டு செய்து வரும் தமிழர் இனம் காக்கும் ஆசிரியருக்கும் ஊனிலும் உயிரிலும் தமிழ் இரத்தம் ஓடும் தமிழாசிரியர் பணி செய்யும் நான் மே மாத இதழ் கண்டு படித்துச் சுவைத்து என் துணைவியர் கிரிசா தேவியுடன் நற்றமிழ் இதழின் ஒவ்வொரு பக்கத்தையும் ஆய்வு செய்து அவரையும் தங்களிதழ் வாசகி ஆக்கிய பெருமையில் மடல் எழுதுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் தமிழில் மருத்துவம் படிக்கச் செய்த மருத்துவர் சாமுவேலுவை வணங்கிடுவோம். மலேசியாவில் அரசு பள்ளிகளில் தமிழ் வரப்போகிறது. நம் தாயகத்தில் எப்போது ஆங்கில மோகம் அழியும்? நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மானிடரை எண்ணி என்றார் பாரதி. அன்று விடுதலை என்றார் பாரதி. இன்று அந்தப் பாரதி இருந்தால் தமிழ் அழிகிறதே என்றும் மழலைக்கும் ஆங்கிலமோகத்தை ஏற்படுத்துவது பற்றியும் அதே பாடலைத்தான் பாடுவார். இதழின் ஒவ்வொரு பக்கமும் அருமை. நன்றி.

**- கீரங்குடி கவிஞர் வெளி. வெங்கட்டராமன், கிரிசாதேவி.**

திராவிட ஒப்பிலக்கணம் அருளிய கால்டுவெலாரைப் படத்துடன் சிறப்பித்துள்ளீர்கள்! அறவிலக்கியம் பகுதி தமிழ் - வடமொழி இலக்கியப் பரப்பை நுணுகி ஆய்ந்து தமிழின் பெருமைகளைக் காட்டுகிறது. இவ்விதழில் ஆசிரியர்கள் பின்பற்றி, அறிந்தும் அறிவிக்கவும் செய்யவைத்த பகுதிகள் படித்தேன். ‘கற்றல் கற்பித்தலில் தமிழ்’ - படத்துடன் ஒலிப்பிறப்பு முறைகளை ஆயும் முறைகாட்டி ‘சித்திரமும் கைப்பழக்கம்’ எனச் சிறந்த உச்சரிப்புப் பயிற்சி தருமாறு முடிவுரை தீட்டியுள்ளார் பா. இறையரசன். பின் அட்டைச் செய்தி - சின்ன குத்தூசி! என்னிடம் பயிலும் மாணாக்கர் பெயர் முன்எழுத்தைத் தமிழாக்கி மகிழ்ந்தேன். வருகை - சேர்க்கைப் பதிவேடுகளில் அவர்தம் பெயர்ப்பதிவின்போதே ஆங்கிலத்தில் சேர்த்துவிட்டுள்ளனர். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் தமிழ்ப்பற்றினால் தலை சுற்றுகிறது!

**- சு. வேல்மணி**

www.padippakam.com



நற்றமிழ் இதழை, ஈரோட்டில் படிக்க நேர்ந்தது. பெயருக்கு ஏற்றபடி இதழில் நற்றமிழைப் பார்த்தேன்; மகிழ்ச்சி கொண்டேன். நாளும் நற்றமிழ் பொழிக!

தமிழுக்குத் தொண்டு புரிந்தவர்களைத் தமிழ்மக்களுக்கு நினைவூட்டிப் போற்றும்படி செய்கின்றீர்கள். திராவிட மொழியின் ஒப்பிலக்கணம் என்னும் நூல் எழுதித் தமிழ்மொழியின் சீரையும் சிறப்பையும் உலகறியச் செய்த கால்டுவெல் அடிகளாரைப் பற்றியும்; தம்பெயரைத் தமிழுக்கு ஏற்றபடி பச்சையப்பன் என மாற்றிக் கொண்டவரும் தமிழ் மருத்துவநூல் தந்தை என்பவருமான சாமுவேல் பிசுகிருன் அவர்களைப் பற்றியும் ஒவ்வொரு பக்கம் என்றாலும் மிகச் சிறப்பாகப் போற்றிப் பெருமைப்படுத்தியுள்ளீர்கள். வளர்க நற்றமிழ்.

**- பாவை. அமுதா, சென்னை.**

மூன்றாவது மொழிப்போர் மாநாட்டில் நிறைவேற்றப்பெற்ற 10 தீர்மானங்களும் நிறைவேற்ற தமிழ்நாட்டு அரசியல்வாணர்க்கு இஃதோர் இறுதி வாய்ப்பாகும் என்னும் தங்கள் கூற்று நூற்றுக்கு நூறு உண்மையானது. வரும் சட்டமன்றத் தேர்தலுக்குள், தமிழ்வளர்ச்சி அமைப்புகளும் பிறவும், தொடர ஆவண மேற்கொள்ள வேண்டும். நற்றமிழ் இதழ் மேலும் மேலும் பல்வேறு வகையில் மெருகேறி வருதல் கண்டு பெருமகிழ்வே! வாழ்க! **- வேலூர் குறளேந்தி.**

நற்றமிழ் மேழ இதழில் முனைவர் ப. மருதநாயகம் அவர்களின் அறவிலக்கியக் கட்டுரை படித்தேன். அக்கட்டுரையில் நீதிசதகப் பாடல் வரிகள் முழுநூலையும் படிக்கத்தூண்டுகிறது. அந்நூல் கிடைக்கும் இடம் முதலிய விவரங்கள் அறிவிக்க வேண்டுகிறேன். **- தூ.சு. முருகையன், திருப்பத்தூர்.**

நற்றமிழ் விடை 2036 இதழ் படித்தேன். சமற்கிருதம்தான் முதன்மொழி தேசிய மொழி என்று போலியாய்ப் பீற்றிக் கொண்டிருந்த வேளையில் அயர்லாந்துநாட்டிலிருந்து வந்த கால்டுவெல் அடிகளார் தமிழ்தான் உலகின் முதன்மொழி என்று உண்மையை மறைக்காமல் உரத்துச் சொன்னவர். ஆரியர்கள் தமிழை சிதைத்தும், மறைத்தும் தமிழர்களை அடிமைகளாய் தீட்டுப் பட்டவர்கள் என்று ஒதுக்கித் தள்ளிய நிலையில், ஆங்கிலேயராய் இருந்திருந்தும் தமிழ்மேல் கொண்ட காதலால் தாம் தமிழ்கற்று தமிழர்களுக்குத் தொண்டு புரிந்த கனித் தமிழ் காத்த கால்டுவெல் அடிகளைப் பாராட்டுவோம். 150 ஆண்டுக்கு முன்பே தமிழில் மருத்துவப் படிப்பு! இதற்கு வழிகாட்டிய அமெரிக்க மருத்துவர் சாமுவேல் அவர்களின் தொண்டும் பாராட்டப்பட வேண்டியவை. ஆங்கிலேயர்களுக்கு இருந்த நேர்மையான தமிழ்ப் பற்று ஆரியர்களுக்கு இல்லையே! **- அருவை, தமிழன்பன்.**

www.padippakam.com



நற்றமிழ் இளங்கவிஞர்களின் தமிழுணர்வைத் தூண்டுவதாக உள்ளது; மகிழ்ச்சியளிக்கிறது. அனைத்துச் செய்திகளையும் ஒருங்குதிரட்டி மக்கள் அறியச் செய்யும் நற்றமிழ் வளர இறைவனிடம் வேண்டிக்கொள்கிறேன். - மு. சக்தி, இராணிமேரி கல்லூரி.

## தமிழ் அன்னை இல்லம் புதுமனைப் புகுவிழா

தி.ஆ. உ0௩சு மேழம் உஅ ஆம் நாள் (11-05-2005) புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன நூலகர் திரு **கு. இராசேந்திரன் - இரா. தனலட்சுமி** இணையரின், முதலியார் பேட்டை, அகத்தியர் நகரில் அமைந்துள்ள **தமிழ் அன்னை இல்லம்** என்னும் பெயரிட்ட இல்லத்தின் புதுமனைப்புகுவிழா சிறப்பாக நடைபெற்றது. விழாவின் பொழுது தெளிதமிழ், நற்றமிழ், கரந்தடி, வெல்லும் தூயதமிழ், புதுவை வானம்பாடி, உங்கள் பாரதி, ஓசை, தென்மொழி, நாளை விடியும் சிந்தனையாளன், தமிழியக்கம், யாதும் ஊரே ஆகிய தமிழ்ச் சிற்றிதழ் ஒவ்வொன்றுக்கும். வளர்ச்சிக் கொடையாக உரு ஐந்நூறு (உரு. 500/-) வழங்கப்பெற்றது. தமிழ் உணர்வால் சிற்றிதமிழ் வளர்ச்சிக்கு உதவிய **கு. இராசேந்திரன் - இர. தனலட்சுமி** இணையர் சீரும் சிறப்பும் உற வாழ நற்றமிழ் வாழ்த்துகிறது. - ஆசிரியர்.



## மணமக்கள் வாழ்க!



தி.ஆ - உ0௩சு விடை சு ஆம் நாள் (20-05-2005) புதுச்சேரி, மோரி சான்தோட்டம் திரு அ. எம்பெருமான் - பேபி (எ) ஞானாம்பிகை இணையரின் மகன் செல்வன் எ. அமுதன், புதுச்சேரி, நோணாங்குப்பம் திரு செ. அரிகிருட்டிணன் - கிருட்டிணம்மாள் இணையரின் மகள் செல்வி அ. கலைமதி ஆகிய இருவருக்கும் வில்லியனூரில், சண்முகா திருமண நிலையத்தில் திருமண வரவேற்பு பேராசிரியர் ம.இலெ. தங்கப்பா அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தது. நற்றமிழ் ஆசிரியர் மு. இறைவிழியன் அவர்களும் மணமக்களை வாழ்த்தினார்.

தி.ஆ. உ0௩சு விடை - உ0 ஆம் நாள் (3-6-2005) சென்னை, அசோக நகர், பேரறிஞர் அண்ணா திருமணக்கூடத்தில் முனைவர் இளமாறன் - சாந்தி இணையரின் மகள் செல்வி நா. மலர்க்கொடி செல்வன் வீ. இரவிச்சந்திரன் ஆகிய இருவருக்கும் சிறப்பாகத் தமிழ்த் திருமணம் நடந்தது.

மணமக்கள் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ நற்றமிழ் வாழ்த்துகிறது. - ஆசிரியர்.

www.padippakam.com



## புலவர் மாசில் மகிழ்நன் அவர்களின் மடல்

1. அயர்லாந்திலிருந்து வந்து அருந்தமிழைக் கற்று, ஆய்ந்து 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எழுதித்தமிழுக்கு ஏற்றம் தந்த கால்டுவெல்அடிகளாரை வணங்கிப்பாராட்டி நன்றி செலுத்துவது நம் கடமையாகும்.

2. பக்கம்-4 : பாதிரி போது பிரித்தன்ன அம்கோசிகமும்... இதில் பாதிரிப்பூவிற்குக் கோசிக ஆடை உவமையாக வரவில்லை: கோசிக ஆடைக்குப்பாதிரிப்பூ உவமையாக வந்துள்ளது.

3. பக்கம் 6 : 'கிள்ளை' கிளியைக் குறிப்பது போல 'தத்தை' என்ற சொல்லும் கிளியைக் குறிக்கிறது. இதைக் காரணப்பெயராக வலிந்து கொள்ள வேண்டியதில்லை. இது தமிழ்ச்சொல்லே; இந்தி மொழியிலிருந்து வந்ததன்று.

4. 150 ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாணத்தில் தமிழில் மருத்துவப்படிப்பு இருந்தது என்றால் இப்போது தமிழகத்தில் மருத்துவம், பொறியியல் முதலிய படிப்புகளைத் தமிழில் தரமுடியாதா? முயன்றால் முடியும். இது உறுதி. விரைவில் தமிழ்வழியில் கற்பிக்க வேண்டும்.

5. கொடுத்தபடி பாடல்கள் தொடுத்த 205 பாவலர்களுக்கும் பாராட்டுகள்! அவர்களின் 47 பேர் (23%) பெண்பாற் பாவலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கீழ்வரும் எண்ணுள்ள பாக்கள் சிறப்பாயுள்ளன. 34, 43, 51, 52, 72, 166 அவற்றை இயற்றியவர்களுக்குச் சிறப்பான பாராட்டுகள்.

6. ஆன்மிகத்தை ஆன்மா+ஈகம் என்று பிரிப்பது பொருத்தமாயில்லை. இதற்குப் புணர்ச்சி விதியும் பொருந்தவில்லை. ஆன்மிகம் என்பது ஆன்மாவைப் பற்றி ஆன்ம ஈடேற்றத்தைப்பற்றி அறிவதாகும். வள்ளலார் ஆன்ம நேயம் என்று குறிப்பிடுகிறார். இதற்கு 'உயிரிரக்கம்' என்று பொருள். காந்தியம் (காந்தீயம் என்பது தவறு) நாகரிகம், சோசலிசம் - இவை இயம், இகம், இசம் என்ற சொற்களால் முடிந்துள்ளன. இவற்றில் 'ஈ' என்ற நெடில் வரவில்லை. 'இ' என்ற குறில்தான் உள்ளது. எனவே ஆன்மிகம் என்று வழங்குவதே சரியாகும். (இவை பிற்கால வழக்குகளாகும்)

### வஞ்சி விருத்தம்-3 (தொடர்ச்சி)

கூடா நட்பினைக் கொண்டவர்
மாடாய்ப் பல்பணி செய்துமே!
ஓடாய்த் தன்னுடல் நொந்துமே
வாடிப் போகிறார் என்றுமே!

210. - அ. இலக்குமணன், திருநள்ளாறு.

சாலை யாவிலும் சோலைகள்
வேலை செய்யவே வீங்குவர்
ஆலை சேர்ந்ததால் அப்பனே
பாலை யானது பாவலூர்!

211. - ஆலா, புதுவை.

www.padippakam.com



# கொடுத்தபடி தொடுத்த பாடல்கள்

## வஞ்சி விருத்தம்-3

## தேமா+கூவிளம்+கூவிளம்

கண்ணில் காண்பதும் உண்மையே
மண்ணில் வாழ்வதும் உண்மையே
விண்ணில் போவதும் உண்மையே
எண்ணில் யாவையும் உண்மையே
1. - கவிஞர் கி. பாரதிதாசன், பிரான்சு.

காதல் என்பது தேவையே!
மோதல் என்பது தேவையா?
ஈதல் என்பது தேவையே!
சாதல் என்பது தேவையா?
2. - கவிஞர் தே. சனார்த்தனன், முதலியார்பேட்டை.

வீசுந் தென்றலை வேண்டுவோம்
மாசிற் செந்தமிழ் போற்றுவோம்
கூசுந் தீச்செயல் ஓட்டுவோம்
ஏசும் எத்தரை வீழ்த்துவோம்!
3.- பாவலர் வே. முத்தையன், முத்தியால்பேட்டை.

நாட்டில் ஒற்றுமை காப்பதும்
வீட்டில் நல்லறம் சேர்ப்பதும்
பாட்டில் இன்னிசை பூப்பதும்
ஏட்டில் உள்ளதே எண்ணடா!
4.- கவிஞர் வே. பூங்குழலி பெருமாள், திரு.வி.க. நகர்.

கல்வி கற்றவர் வாழ்வினில்
நல்ல தொண்டினை நாடுவர்;
கல்லார் இத்தகை நற்செயல்
மெல்ல ஆற்றலும் ஒல்லுமோ?
5. - புலவர் த. தட்சணாமூர்த்தி, தி.ரா. பட்டினம்.

சாரல் கோடையில் வேண்டிடார்!
வாரா நன்மையை நொந்திடார்!
தீரா இன்னலை நோக்கிடார்!
தீரம் நெஞ்சினில் கொண்டதால்!
6.- திருமதி. பாவை. கண்ணதாசன், கூடுவாஞ்சேரி.

இன்பம் தந்திடும் செந்தமிழ்
துன்பம் நீக்கிடும் நற்றமிழ்
பண்பைத் தந்திடும் நந்தமிழ்
அன்பை ஈந்திடும் பைந்தமிழ்!
7. - வி. கோபாலகிருட்டிணன், தி.கொ.அ.க.கல்லூரி.

கொஞ்சும் தேயுடைப் பெண்டிரும்
விஞ்சும் மூப்புடை மைந்தரும்
பிஞ்சும் வெம்பிட ஆடிடும்
நஞ்சாம் தீப்படம் வேண்டுமோ?
8. - புதுவை. ப. மங்கையர்க்கரசி.

மாசு சூழ்ந்திடும் வானிலே
'ஓசோன்' ஓட்டையும் வீழ்ந்ததே!
வீசும் வெங்கதிர் தாக்கியே
நாச மாவதும் மாறுமோ?
9. - நிலவுப்பாவலர் கு. தட்சணாமூர்த்தி, முதலியார்பேட்டை.

தேடுங் கல்வியில் தேர்ந்திட
ஓடும் உன்னுயிர் என்றிரு!
நாடும் வாழ்வினில் நன்மையும்
பீடும் நம்மினம் பெற்றிடும்!
10. - மணிமேகலை குப்புசாமி, குறிஞ்சி நகர்.

உண்மை சொல்வதும்; ஊறிலா
எண்ணம் கொள்வதும்; ஏற்புடை
நன்மை யாற்றலும் நாட்டிலே
இன்மை யானதும் ஏன்சொலீர்?
11. - கொட்டப்பட்டு, ப. சக்திவேலன்.

விண்ணில் கார்முகில் கூடவே
மண்ணில் மாமயி லாடுமே!
மண்ணில் மானிட ரெண்ணமே
விண்ணார் நல்லறம் தேக்குமே!
12. - அகரமுதல்வி, பொன்மலை, திருச்சி.

என்னின் புன்மைகள் போக்கிய
என்னுள் நன்மைகள் தேக்கிய
உன்னை நன்றியால் ஏற்றுவேன்
என்றும் தெய்வமாய்ப் போற்றுவேன்.
13. - வெ. பரமசிவபாண்டியன், சின்னாளபட்டி.

தாயே! தன்னுயிர் தந்தவள்!
நீயே! வான்புகழ் கொண்டவள்!
தூய நெஞ்சுடன் நின்றெனை
வையம் போற்றிடச் செய்குவள்!
14. - உலக. செந்தில்முருகன், திருமுட்டம்.

www.padippakam.com



தூய செந்தமிழ் தன்னையே
தீய தாமெனக் கூறியே
வாயால் கெட்டனை காந்தனே
நாயாய்ச் சுற்றியே சாகுவாய்!

15. - இசைவாணர் எ. சிவாநந்தம், பாகூர்.

ஆடை யின்றியே மேடையில்
ஆடல் கொள்வது கூட்டமாய்
நாட கப்பணி ஆகுமா
பேடி கள்செயல் சாடுவீர்.

16. - மு.இராம. கனகராசன், புதுவை.

தாயே செந்தமி ழே!யுனை
வாயாற் போற்றியே வாழ்த்துவர்
ஆய நற்செய லாற்றிடும்
நேயம் நெஞ்சினி லின்றியே!

17. - அதலை இராமன், மதுரை.

பாரில் முன்னது பைந்தமிழ்,
சீராய்க் காத்திடு நம்தமிழ்,
ஊரார் கற்றிட ஊக்கிடு,
பேரார் வத்துடன் போற்றியே!

18. - புலவர் செ. இராமலிங்கன், புதுவை.

செந்தேன் நேர்தமிழ் நீ படி!
பைந்தேன் நேர்குறள் மாந்திடு!
நொந்தோர் வாழ்வுற நல்வினை
எந்தக் காலமும் ஆற்றிடு!

19. - புதுவை. ப. அங்கயற்கண்ணி, புதுவை

மாளாத் துன்பொடு வாழ்ந்தனன்;
கேளாய்க் காரிகை கொண்டனன்;
மீளாச் செந்தமிழ் ஆழியில்
நாளும் நீந்தியே வாழ்கிறேன்.

20. - ப. முத்தமிழ்வாணன், புதுவை.

தாயே என்னுயிர் நற்றுணை!
நீயே என்னுடல் என்பொருள்!
சேயே நானுனக் கென்றருள்
வாயே நற்றமி ழன்னையே!

21. - வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

செம்மை சேர்தமிழ் சீர்பெற
நம்மால் ஆனதைச் செய்தலே
செம்மை தந்திடும் வாழ்விலே!
இம்மை உய்வுறும் தொண்டதே.

22. - புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி.

பாகாய் வாஎன வேண்டியும்
போகா யோஎனத் தூண்டியும்
ஏகா தேகிள மாதிவள்
வாகார் தோள்வளம் மாறினள்.

23. - மணிமொழியார்.

தக்க நந்தமிழ் வாணரை
நக்கும் நாயெனத் தூற்றிடும்
மக்கு மாந்தனின் போக்கினை
மிக்கெ ழுந்துநாம் மாற்றுவோம்.

24. - வே.இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

சென்ற அன்பரைத் தேடியே
என்றன் உள்ளமும் ஓடிட
அன்று கண்டஎன் கண்களும்
சென்று பார்க்கவே வேண்டின.

25. - குறளரசன், வேலாயுதம்பாளையம்.

இல்லாச் சாமியைக் கும்பிடும்
எல்லா மக்களும் கேட்பிரோ?
கல்லை இன்னுமே நீங்களும்
கொள்ளல் கேவலம் நேருமே!

26. - ஏர்முனை மு.குழ. மூர்த்தி, வேலாயுதம்பாளையம்.

நாடும் நந்தமிழ் அன்னையும்
கேடு நீங்கியே வாழ்ந்திடப்
பாடு பட்டிட உன்நிலை
கோடு கண்டஓர் நல்லொளி!

27. - க. துரையரசன், வேலாயுதம்பாளையம்.

அன்னாய்! வாழிய செந்தமிழ்!
வென்றே ஓங்குக நின்புகழ்!
நன்றே வாழ்கபல் லாண்டுகள்!
மின்னே ராங்கதிர் ஆகநீ!

28. - கருவை. மு. குழந்தை.

வேம்பின் வேருமருந்துகாண்!
கூம்பும் பூக்களும் அங்ஙனே;
பாம்பை யும்புசிப் பாருளார்!
நோன்பெ னல்வெறும் பொய்ம்மையே.

29. - வில்லியன், புதுவை.

ஏற்றத் தாழ்வினைப் போக்கிடும்
மாற்றம் நம்மிடை வந்திட
ஆற்றல் பெற்றநல் லாட்சியைத்
தேற்றம் பெற்றுநீ தேர்ந்தெடு!

30. - இரா. அருணாசலம், ஆனந்தா நகர்.

www.padippakam.com



தொல்லை நீங்கியே வாழ்ந்திடக்
கல்வி கற்றலே நல்வழி!
நல்ல பண்புகள் பெற்றிடு!
நல்லோர் போற்றவே வாழ்ந்திடு!

31. - ச. திருநாவுக்கரசு, முசிரி.

தேளா வார்தழல் தேக்கிய
தோளார் மாமடைந் தாடினார்
மேலை தானுடை மங்கையார்
நாளை பேணிலர் வாழவே.

32. - புலவர் இடிமுரசார், சென்னை.

பூவைப் போல்இரு பெண்உரு
பாவை தன்கரு வில்வர
தேவை யில்லைபோல் ஓடினாள்
பாவி மாமியார் என்பவள்?

33. - சூலூர்க் கலைப்பித்தன்.

காட்டுப் பொற்குயில் காக்கையின்
கூட்டில் முட்டையும் இட்டது
வாட்டம் கொஞ்சமும் இன்றியே
பாட்டுப் பாடவே சென்றது!

34. - த. கருணைச்சாமி, தேனி.

வந்த கார்மழை போனது
தந்த செல்வமும் தீர்ந்தது
எந்தச் சொந்தமும் இன்றிலை
வெந்து போனது நெஞ்சமே.

35. - புதுவை. நா. பொன்னுசாமி.

சொந்த நாடெனும் நீணிலம்,
இந்த நாட்டவர் ஆளுவார்,
எந்த நாட்டவர் ஏந்துவார்?
வந்த பீடையே ஓடுநீ!

36. - அரு. மணிவாசகன், திருமருகல்.

தொன்று தொட்டுநம் தூய்தமிழ்
வென்று வந்ததைப் பாரடா!
நன்று நற்றமிழ் கற்றுடன்
வென்று வீறுடன் வாழடா!

37. - சோழமாமல்லன்,

கற்ற லின்றியே வாழ்ந்திட
மற்ற மக்களே போற்றிடார்
கற்ற மக்களே மற்றவர்
கற்கச் செய்திடல் வேண்டுமே.

38. - தி. பக்கிரிசாமி, திருமலைராயன்பட்டினம்.

நல்ல நூலினை நாடிடு!
சொல்லும் நற்பொருள் தேடிடு!
கல்லா தார்க்கதைக் கூறிடு!
எல்லா ருக்குமாய் வாழ்ந்திடு!

39. - புலவர் அ. பக்கிரிசாமி, திருநள்ளாறு.

பெற்ற தாயினைப் பேணிடு!
குற்ற மின்றியே பேசிடு!
கற்ற கல்வியைக் காத்திடு!
மற்ற யாவுமே சேர்ந்திடும்!

40.- தரங்கை. க. சண்முக சிதம்பரம், தரங்கம்பட்டி.

வெற்றி பெற்றிட வாழ்விலே
கற்றுத் தேரணும் தம்பியே!
உற்ற தோழனைக் கண்டுமே
பற்று வைத்திடு நண்பனே!

41. - ஆ. முனியப்பன், தரங்கம்பட்டி.

அன்பர் இல்லமே வந்திடின்
கண்கள் நல்லருள் காட்டுமே!
இன்பம் நெஞ்சினில் கூடுமே
துன்பம் யாவுமே ஓடுமே!

42. - வாழியூர் வே. இராசவேலன்.

நன்றே செய்திடு! நாநிலம்
என்றும் சேர்த்துனை வாழ்த்திடும்!
குன்றா ஊக்கமே கொண்டிடு!
வென்று என்றுமே ஓங்கிடு!

43. - இரா.கு. அரங்கசாமி, தங்கவயல்.

கற்கும் கல்வியை விஞ்சியே
நிற்கும் நற்பொருள் இன்மையால்
ஒற்கம் உற்றிட நேரினும்
கற்று யர்வதே கண்ணியம்.

44. - சீ.பெ. முத்துக்குமரன், கோவை.

கற்ற றிந்தவர் என்றுமே
சற்றும் தூற்றியே பேசிடார்!
புற்றின் ஈசலாய்ப் பொங்குவோர்
மற்றே என்னயிங் காகுவார்?

45. - படைக்களப் பாவலர், ஆர்க்காடு.

அன்பு மிக்கவள் என்மகள்
நன்று பாடுவாள் பாடலே!
இன்று கேட்பினும் ஆர்வமாய்
இன்னே பாடுவாள் ஏற்றமாய்!

46. - தேன்மொழி, ஆர்க்காடு.

படிப்பகம்

www.padippakam.com



நல்ல தென்றுமே கேட்டிடு!
நல்ல தென்றுமே பார்த்திடு!
நல்ல தென்றுமே பேசிடு!
நல்ல தென்றுமே செய்திடு!
47. - ஆ. முகிலரசி, ஆர்க்காடு.

ஆட்டம் ஆடுவாள் தங்கையே!
பாட்டுப் பாடுவான் தம்பியே!
கூட்ட மாகவே கூடினால்
ஆட்டம் பாட்டமே வீட்டிலே!
48. - ஆ. சோதி மலர், விளாப்பாக்கம்.

வான ளாவிடு சோலையா?
தான ளாவிடு மாலையா?
மீனு லாவிடு வாரியா?
ஆன நற்றமிழ்ப் பாக்களே!
49. - வானவன், வெங்காலூர்.

இன்னல் நீங்கிடும்; இன்பமும்
என்றும் பொங்கிடும்; இன்னிசை
நன்கு மீட்டிடும்; பூமழலை
உன்னைத் தீண்டிடும் போதினில்.
50. - சா. இராசலிங்கம், திருவண்ணாமலை.

தாய்மொல் கேடனாம் காந்தனே
சாய்ந்த சங்கதச் சாமொழி
நாய்ப்பின் நக்கிநீ சாய்ந்தனை!
மாய்ந்த நீசவ காந்தனே!
51. - பொறிஞர் அகன், திருச்சி.

இன்றே நன்கொடை தந்திடின்
நன்றாய் வந்திடும் சிற்றிதழ்
அன்றே எம்மொழி செம்மொழி
என்றே கூறுவேன் நானினி.
52. - பாச்சுடர் வளவ. துரையன், கடலூர்.

தேர்வில் தோல்விய டைந்தவர்
சோர்ந்து தேறிடும் பாதையை
நேர்மை மாறிடா தெண்ணினால்
தேர்ச்சி இன்புடன் கிட்டுமே!
53. - கவிஞர் இனியன், கும்பகோணம்.

விண்ணில் ஆதவன் வந்ததும்
மண்ணில் பூத்திடும் தாமரை
எண்ணில் லாமலர் வண்டுகள்
பண்ணை மீட்டியே பாடிடும்.
54. - நா. இராசசெல்வன், புதுவை.

எண்ணம் சொல்செயல் மூன்றுமே
நண்ணும் நல்லறம் நாடுமேல்
மண்ணில் மெய்ப்புகழ் சூழுமே!
விண்ணும் நம்வசம் ஆகுமே!
55. - புலவர். மா.சு. மணி, திருக்கழுக்குன்றம்.

நாணு வாரவர் பேசவே
காணும் கண்களோ பேசுமே
பேணு வாரவர் காதலை
வானி னின்பமே காண்பரே!
56. - வி. சங்கர், வேலூர்.

விண்ணில் ஆய்ந்திடி னில்லையே
மண்ணில் உள்ளனோ ஈசனும்?
நண்ணித் தேர்ந்திடின் உள்ளமே
அண்ணல் வாழ்ந்திடு மாலயம்!
57. - சு. இலம்போதரன், சென்னை.

ஏட்டில் எப்படி ஏற்றினர்
நாட்டில் அப்படி நாட்டுதும்
வீட்டுப் பெண்டிரும் வென்றிட
மேட்டில் ஏறுதல் மேலதே!
58. - புலவர் த. ஆறுமுகம், சென்னை.

மண்ணில் முத்தமிழ் பாடினோம்
அன்பே தந்திடும் நாவினால்
கண்ணா! வெற்றியே நீதர
என்றும் போற்றுவோம் உன்னையே!
59. - மு. ஆனந்தன், திரு.கொ.அ.க.கல்லூரி.

வீணே நாள்தனைப் போக்கிட
வீணர் போர்தனை நாடினார்!
வாணாள் மானுட விந்தையே
தேனை நாடுதல் போலவே!
60. - கவிஞர் பெ. அறிவழகன், சின்னசேலம்.

தேனே! தெள்ளமு தேஇள
மானே! மாங்குயி லே!உனைக்
காணேன் எங்குமே! எங்குநீ
வீணே சென்றனை? வந்திடு!
61. - பொன். பசுபதி, புதுவை.

நண்பா! நட்பெனும் செம்மலர்
பண்பு போற்றிடும் வாழவே!
கண்போல் நட்பினைக் காக்கவே
எண்ணில் வெற்றியும் நம்கையில்!
62. - இரா. பூமாலை, காவனூர்.

www.padippakam.com



எங்கும் பூத்திடும் பூக்களாய்
எங்கும் வீசிடும் தென்றலாய்
திங்கள் போலவே மின்னிடும்
மங்காச் சீர்மையின் மங்கைநான்.
63. - து. தில்லைராணி, செயங்கொண்டம்.

அல்ல வற்றையே செய்திடும்
பொல்லார் போக்கதைப் போக்குவோம்.
நல்ல ஆக்கமாம் சொற்செயல்
எல்லா ருக்குமாய் ஏற்றுவோம்.
64. - திருமதி. கற்பகம், பரதராமி.

தாயின் பாலினைத் தூற்றிய
பேயின் நாவினில் தீயிடு!
வாயில் நஞ்சுமிழ் காந்தெனும்
நாயின் வாலினை வெட்டிடு!
65. - பாவலர் கருமலைத்தமிழாழன், ஓசூர்.

தங்கம் கிட்டிய போதிலும்
தெங்கு கிட்டிய போதிலும்
அங்கு மிங்குமு ருட்டிடும்
எங்கும் நாய்களின் போக்கிதே.
66. - து. ஆதிநாராயணமூர்த்தி, பரதராமி.

விண்ணில் மின்னிடும் மீன்களாய்ப்
பண்பில் நட்புதான் வேண்டுமே!
கண்ணின் பார்வையைப் போலவே
நண்பர் என்கிற கூட்டமே!
67.- ஏழுவிண்மீன் நண்பர்கள், திரு.கொ.அ.க.கல்லூரி.

நல்லார் பாரினில் பெற்றிடும்
கல்வி செய்தியாய்ப் பாய்ந்திடும்!
கல்லார் வீட்டினில் பொய்மைதான்!
இல்லம் நட்பினால் ஓங்குமே!
68. - சி. தமிழ்விழியன், கொடுக்கூர்.

அன்னை என்கிற தெய்வமோ
அன்பும் பற்றுடன் காட்டினும்
என்னில் பற்பல ஆர்வமே
என்றும் பாவலர் முத்தையன்!
69. - இரா. முத்தையன், காவனூர்.

ஏனோ என்னையே நோக்கினள்?
தானாய்க் கண்களால் பேசினள்!
ஏனோ புன்னகை சிந்தினள்?
நானோ நங்கையின் நாயகன்?
70. - ப. நீலா, புதுவை.

தீரா நோய்களைத் தீர்ப்பவள்
சீராய் நன்மைகள் சேர்ப்பவள்
வேராய் ஊன்றியே காப்பவள்
ஊரார் போற்றிடும் சக்தியே.
71. - ப. வனிதா, நெய்வேலி.

விண்ணில் மின்னிடும் மீன்களாய்க்
கண்ணில் நின்றிடும் காட்சியாய்
உண்மை சொல்லிடும் வேதமாய்
மண்ணில் முத்தமிழ் நண்பரே!
72. - வெ. மாதவன், விருத்தாச்சலம்.

பாரில் வாழ்ந்திடும் மக்களை
சீரில் வாழவே வைத்திடும்
நேரில் நின்றிடும் தெய்வமாய்
ஊரில் வாழ்ந்திடும் சான்சனே!
73.- மருத்துவர் ம. சான்சன், செயங்கொண்டம்.

பாடல் கொண்டுனைப் பாடினேன்
தேடல் தந்தவன் நீயடி
கூடல் தானடி நம்வினை
ஊடல் ஏனடி என்னுடன்!
74. - மு. அருணகிரி, பாதூர்.

தாயைப் போற்றிடாத் தீயவன்;
நாயை ஒப்பிட நாணிலன்;
பேயை ஒத்திடும் பண்பினன்
வாயைச் சாணியால் மூடுவீர்!
75. - இரா. அருமருந்தலைவன், திருமருகல்.

சாதி ஏதடா மூடனே
மோதி முட்டியே மாய்ந்திடாய்!
சூதின் மாக்களின் கூற்றிது
நீதி நன்னெறி தேர்ந்திடு!
76. - இ. இராசேந்திரன், புதுச்சேரி.

தேன்!தேன்! செந்தமிழ் தேனடா!
வான்!வா னோரமிழ் தாமடா!
நான்நான்! என்னுயி ரென்பதும்
காண்!காண்! பைந்தமிழ்! கூறடா!
77. - கோவி. கலியபெருமாள், புதுச்சேரி.

நங்கை சுட்டிடும் அப்பமாம்
தெங்கின் பாலொடும் உண்ணுக!
எங்கும் ஒன்றுடன் ஒன்றினைத்
தங்கும் பாங்குடன் ஒப்பிடு!
78. - இரா. திருமகள், புதுச்சேரி.

www.padippakam.com



கல்வி தந்திடும் கூடமோ
செல்வம் சேர்த்திடும் போக்கிலே
இல்லிச் செய்கையைச் செய்வதால்
எல்லில் வீழ்ந்திடும் காலமே
79. - பெரியம்மாள் மோகன், கல்லக்குறிச்சி.

கல்விக் குற்றதோர் நூலிலும்
சொல்லித் தீர்ந்திடாப் போக்கிலே
எல்லை விஞ்சிடும் தப்பினை
மல்லை போக்கிட வைத்துளர்.
80. - க. திருக்குறட்பாவை, கல்லக்குறிச்சி.

எல்லை யற்றதோர் நன்கொடை
பொல்லாப் போக்கினர் வாங்கலை
நொள்ளை ஆட்சியர் காண்கிலர்
கல்லைப் போன்றதோர் தன்மையர்
81. - மோ. கலாநிதி, மேல்ஒலக்கூர்.

"துன்பம் நீங்கியே நல்லுளம்
இன்பம் பெற்றிட எண்ணிடின்
மன்னு நல்லுயிர் மீதிலே
அன்பு கொண்டிட வேண்டுமே!"
82. - க. அன்புக்கோகிலா, செஞ்சி.

தாயும் சேணகல் போதிலே
சேயும் கூற்றதன் வாயிலே
ஓயும் ஆவியும் யாக்கையும்
மாயும் மாந்தனே பார்த்தறி.
83. - மோ. கலாபன், சின்னசேலம்.

பள்ளி சென்றிடும் பிள்ளைகள்
கொள்கை பெற்றுமே வாழ்ந்திட
உள்ளம் கொண்டவர் கற்பதோ
கொள்ளி ஒப்பதோர் ஆங்கிலம்.
84. - க. கீதா, விருகாவூர்.

பெற்ற பிள்ளைகள் கல்வியைப்
பெற்றே ஓங்கிடச் செய்வதாய்ச்
சற்றும் கூர்மதி இல்லவர்
கற்றைக் கற்றையாய்ப் பேசுவர்.
85. - க. கலையரசி, கல்லக்குறிச்சி.

பள்ளிக் கட்டடம் வீழ்ந்திடும்
பிள்ளை சிக்கியே மாய்ந்திடும்
குள்ளர் கட்டிய கட்டடம்
நொள்ளைக் கண்ணிலே பட்டிடா
86. - அய்யா. மோகன், கல்லக்குறிச்சி.

பண்பில் கல்வியைக் கற்பவர்
வெண்டேர் நோக்கிய மானென
அண்டை உள்ளதை விட்டனர்
மண்ணில் வாழ்விலை; போயினர்.
87. - தமிழடுக்கம், கல்லக்குறிச்சி.

வன்மை காத்திடு தோழரால்
நன்மை தோன்றிடல் காண்கினும்
உண்மை பேசிட அஞ்சுவார்
என்றும் தன்னலம் காப்பவர்!
88. - சா. சம்பத்து, பெருமாங்குப்பம்.

பள்ளித் தேர்வினில் தோற்றவர்
வெல்லு மூக்கமே சோர்ந்திடா
துள்ளம், மீளவுந் தேர்வதே
நல்ல மாணவர் தன்மையாம்
89. - இராச. தியாகராசன், புதுச்சேரி.

ஆறு வீழ்இடம் ஆழியே!
மாறு தல்களும் உண்டிதில்!
ஆறு சிற்சில ஏரியில்
ஏறு போலவே வீழுமே!
90. - த. முத்தமிழ், தருமபுரம்.

ஊறு காயினில் தீஞ்சுவை
மாறு பாட்டையும் நல்கலாம்;
சோறு உண்ணவே வற்றலைக்
கூறு போட்டுநீர் கொள்கவே!
91. - நா. தண்டபாணி, அம்பல்.

தப்புச் செய்திடும் நட்பினை
ஒப்புக் கொள்வது தோல்வியா?
அப்போ துன்மனம் தோல்வியை
ஒப்புக் கொள்வதும் வெற்றியே.
92. - ப. வரலட்சுமி, சு.பா.சு.தமிழ்க்கல்லூரி.

காசு கொட்டியே கல்வியை
வேசி போன்றுமே வாங்கியோர்
ஆசு மிக்கதோர் போக்கிலே
நீசச் செய்கையைச் செய்குவர்.
93. - க. திருக்குறள் அரசு, ஏமப்பேர்.

எந்தப் பாழ்பகை சூழினும்
வந்து சூதுனைக் கல்வினும்
அந்த யாவையும் வெல்லுவை
சொந்தக் காலினில் நின்றிடின்!
94. - பா. விசயலட்சுமி, கோலியனூர்.

www.padippakam.com



வெந்த புண்ணில் வேலது
வந்து பாய்வது போலொரு
துன்பச் சேதிநீ கேட்பினும்
வென்று வீறுகொள் நெஞ்சமே!
95. - சே. வானதி, பழைய கருவாட்சி.

காதல் ஈருளம் சேர்வதாம்!
நோதல் அவ்வுளம் சோர்வதாம்!
ஈதல் அன்பினில் வாழ்வதாம்!
சாதல் துன்பினில் வீழ்வதாம்!
96. - க. செயந்தி, பனமலைப்பேட்டை.

உள்ள போதுதான் பார்உனைக்
கள்ள நெஞ்சொடு வாழ்த்துமே!
இல்லை என்றிடின் தாழ்த்துமே!
தொல்லை தந்துனை வீழ்த்துமே!
97. - பா. கலைச்செல்வம், விழுப்புரம்.

கண்ணின் மேலது கல்வியே!
விண்ணின் மேலது நட்பதே!
பொன்னின் மேலது அன்பதே!
எண்ணிப் பார்த்திடில் உண்மையே!
98. - கல்பனா, பழைய கருவாட்சி.

எண்ணிப் பாரடா உன்னைநீ
என்ன செய்யநீ தோன்றினை?
உண்டு வாழவோ? இல்லையே!
தொண்டு செய்யவே என்றுணர்!
99. - சி. இளங்கண்ணன், விழுப்புரம்.

வேளை வந்திடும் என்றுநீ
நாளைப் போக்குதல் நல்லதோ?
வேளை யாவுமே உன்னதே!
காலை ஊன்றிமுன் செல்லடா?
100. - சி. பாலகிருட்டினன், கோலியனூர்.

பள்ளிப் பிள்ளைகள் பாழ்படக்
கொள்ளைக் கூட்டமே ஆள்வதா?
கள்ளைப் பாலெனக் கொள்வதா?
பிள்ளாய் ஆர்த்தெழு போரிடு.
101. - இரா. குமரன், புதுச்சேரி.

தொண்டு செய்திடு வாழ்வினில்
உண்டு நன்மைகள் என்றுமே!
உண்மை பேசிடு நாவினால்
நன்மை தோன்றிடும் வாழ்வினில்
102. - த. கோபால், பாலி.

இன்பம் என்பது யாதெனில்
உண்மை யாங்கடமைப் பதுதான்!
அன்பே என்பது யாதெனில்
அன்னை காட்டிடும் பற்றெனல்!
103. - கோ. ஈசுவரி, பாலி.

ஒன்றாய் மேய்ந்தநல் ஆக்களைப்
புன்மை சேர்நரி மாய்த்தலாய்
அன்பார் நல்லவர் கூட்டினைப்
பொன்றச் செய்குவர் வீணரே!
104. - மு. தமிழ்நிலவன், ஐயன்குட்டிப்பாளையம்.

அற்றம் உள்ளநம் வாழ்க்கையில்
சிற்றின் பத்தினில் ஆழ்ந்திடல்!
வெற்றி வாயிலை நாம்தொடக்
கற்றல் வேண்டுமே நூல்பல!
105. - பா. செயசுதா, திண்டிவனம்.

வான வில்லதும் தோன்றிட
வானில் கார்முகில் சூழ்ந்திடக்
கானல் நீக்கிடும் தூமழை
வேனில் ஓடிட இன்பமே!
106. - பாலசந்திரன் சேகபு, வேலூர்.

தீது நேர்ந்திடும் என்னினும்
காதி லேகொளார் மீப்பொருள்
மீதி லாசையர் வாழ்வரேல்
ஆதி கேசவர் வாழ்வரே.
107. - கூத்தரசன், புதுவை.

வந்த வேற்றினம் ஆளுது!
சொந்த மண்ணினம் சாகுது!
நொந்து போனது போதுமே
முந்தி வாங்கடா மாற்றவே!
108. - புலவர் சி. வெற்றிவேந்தன், பாகூர்.

என்னுள் எத்தனை இன்பமோ
எண்ணிப் பார்த்திட எத்தனை
மண்ணில் தேடினேன் ஓடினேன்
விண்ணில் சென்றபின் கிட்டுமோ?
109. - அண்ணா. தர்மலிங்கம், புதுவை.

தேர்வின் அவ்விடைத் தாளினை
ஓர்ந்து கள்ளமாய் மாற்றியே
சீர்த்த வன்பொருள் ஈட்டிய
கூர்த்த தீயரை வாட்டுக.
110. - அரங்க. சேசாசலம், புதுவை.

www.padippakam.com



மண்ணில் ஓங்கிய செந்தமிழ்
கண்ணில் மின்னிடும் வண்டமிழ்
பண்ணில் நின்றிடும் தீந்தமிழ்
தொண்டில் வென்றிடும் நற்றமிழ்!

111. - தி. தீபா திருமூர்த்தி, வி. புதுப்பாக்கம்.

பெண்ணைப் பேயெனும் பேதமை
கொண்டார் கொள்வரோ நல்லறம்
அண்டம் யாவுமே அற்பரை
முண்டம் பாழெனத் தள்ளிடும்.

112.- வழக்கறிஞர் சீனி. சிவானந்தம், சென்னை.

பண்பே அற்றவர் ஆட்சியில்
இன்பம் எப்படி வந்திடும்?
கன்றை ஓம்பிடும் ஆவென
என்று மக்களைப் போற்றுவர்?

113. - மு. அமிர்தகடேசுவர், திருச்சிராப்பள்ளி.

உண்மை ஒன்றுதான் வாழ்விலே
நன்மை செய்திடும் நாளெலாம்;
எண்ணம் யாவினும் நல்லதே
என்றும் எண்ணுவோம்; வாழுவோம்!

114. - இரா. நிலவழகன், பனங்குப்பம்.

முப்பால் காட்டிடும் பாதையில்
தப்பா தென்றுமே சென்றிடின்;
அப்பா! எப்பவும் வாழலாம்!
அப்பால் விண்ணையும் - வெல்லலாம்!

115. - இரா. சுடர்வண்ணன், பனங்குப்பம்.

தாயே! உன்றனை நாளெலாம்
சேய்நான் தேடியே பார்க்கிறேன்;
நீயும் எங்குதான் சென்றனை?
நானும் காண்பது எந்தநாள்?

116. - ஒளிவண்ணன், பனங்குப்பம்.

தாயைத் தூற்றியே வாழ்பவர்
நாயை ஒத்திடு வாயவர்
தாயைப் போற்றிடு சேயவர்
தூய செந்தமிழ் நேயரே!

117. - அ. தமிழெழிலன், சிலம்பூர்.

தாயைப் போன்றிடு நம்முடைத்
தூய செந்தமி ழன்பரை
நாயை யொத்தவ ரென்றனன்
வாயைக் காத்திடாத் தீயவன்.

118. - புலவர் சயராமன், கள்ளக்குறிச்சி.

தூய செந்தமிழ் வென்றிட
நேய மிக்கவர் கூடுக!
தேய மெங்கணுஞ் செம்மொழி
பாய யாவரும் ஒன்றுக!

119. - ச. தமிழ்ச்செல்வி, கள்ளக்குறிச்சி.

கல்வி என்றதோர் வாணிகம்
மெல்ல நாட்டினில் மேவிடச்
செல்வர் செல்வராய்ச் சேர்ந்தனர்
இல்லார் இல்லையாய் ஆயினர்.

120. - திருமதி. ஏமாபாய், வெள்ளிமலை.

அன்பு கொண்டிடா நெஞ்சினர்
என்பு கொண்டிடாப் பூச்சிகள்!
துன்ப முற்றிடு போழ்தினில்
சென்று நீக்குவர் தூயரே!

121. - ச. அருள், சிலம்பூர்.

காந்த னென்பவன் றாய்த்தமிழ்
மாந்தர் பற்றினைக் கீழ்மையாய்
வாந்தி வந்திடப் பேசினான்
ஏந்தி ஏற்றிடு நாயவன்!

122. - சிலம்பூர்க்கிழான், கள்ளக்குறிச்சி.

ஆடு மாடுகள் போயின!
வீடு வாசலும் போயின!
பாடு தான்படும் ஏழையை
நாடு இன்னுமென் செய்யுமோ?

123. - மனோந்திரா, மதுரை.

கூட்டும் காரியம் புண்ணியம்
கூட்டில் வேண்டுமே கண்ணியம்
வீட்டில் வென்றிடும் கூட்டுமே
நாட்டை நிம்மதி ஆக்கிடும்.

124. - ஆ. இராசு, இரிசிவந்தியம்.

அண்ணா கூறிய பொன்மொழி
கண்ணாய்க் காத்திடும் நல்வழி
மண்ணோர் போற்றிட அவ்வழி
விண்ணாய் ஓங்கியே வாழ்வராம்!

125. - அர. கிரிசாநாதன், இரிசிவந்தியம்.

பாரோர் போற்றிடும் பண்பிலே
சீரார் நல்வழிக் கல்வியைத்
தேரார் பொய்வழி பெற்றிடின்
நேராய் வந்திடும் துன்பமே!

126. - புலவர். உலோ. சுப்பிரமணியன், சென்னை.

www.padippakam.com



நின்று என்றுமே நீள்புகழ்
நன்று மண்ணிலே தோன்றிட
மன்னர் மூவரும் தண்டமிழ்
மன்றம் கண்டனர் வென்றனர்.
127. - இரா. அரங்கநாதன், செஞ்சிக்கோட்டை.

என்னை இன்புடன் ஈன்றவள்
கண்ணைப் போன்றெனைக் காப்பவள்
மண்ணில் வாழ்ந்திடும் மாண்புடை
அன்னை அன்பெனும் ஆலயம்.
128. - கவி. சக்கர. கண்ணபிரான், சென்னை.

உள்ளம் என்னிடம் காண்கிலேன்
கள்ளி உன்னிடம் வந்ததா?
கள்ளம் என்னிடம் ஏதடி
அள்ளிக் கொள்ளடி இன்றெனை!
129. - கே.வி. சனார்த்தனன், காஞ்சிபுரம்.

அன்பால் ஆரையும் வென்றிடு!
பண்பால் பல்லுயிர் ஓம்பிடு!
கண்ணால் கண்டதை ஆய்ந்திடு!
உன்பால் யாவரும் நிற்பரே!
130. - பாவலர். இரத்தின. சின்னசாமி, புதுவை.

தன்மை உள்ளவர் மனிதராம்
நன்மை செய்பவர் மனிதராம்
இன்மை போக்குவோர் மனிதராம்
வன்மை அற்றவர் மனிதராம்.
131. - அர. இளம்பூரணன், தொழுதூர்.

தாயை ஏசிடும் காந்தனின்
தூய நன்றியைப் பாரடா?
ஆய்ந்தே ஓர்ந்துணர் மானிடா!
தேய்ந்து போகுமே மன்புகழ்!
132. - கு. கோவிந்தன், செங்கம்.

குன்றின் மேலுள பேரொளி
நின்றிங் கிங்குநி லைக்கவே
நன்றிங் காற்றிடு நற்பணி
என்றும் நற்றமிழ் வாழவே!
133. - மு.வே. கங்காதரன், சென்னை.

நாயா தூய்தமிழ் வேண்டுவோர்?
தீயா தாயுளம் தீய்த்தவா!
போயா, நானறம் பாடுமுன்
போயாபோ, தமிழ் நாடகல்!
134. - மு. சீனிவாசன், திண்டுக்கல்.

காய்கள் கீரைகள் தீங்கனி
வாய்க்கும் சாறுகள் மாந்திடின்
நோய்கள் தீர்ந்திடும்! நும்செவி
சாய்த்தே ஏற்குவீர்! மாந்தரே!
135. - புலவர் மு. குறளகன், கருவூர்.

காணும் கண்ணிரண் டாயினும்
தோணும் காட்சியிங் கொன்றுதான்
வீணாம் சாதிகள் மாந்தனுள்
காணும் ஒற்றுமை காய்ந்ததே!
136. - த. குமாரசாமி எசுதர், கருவூர்.

ஏறும் ஏணியைக் காப்பது
ஊறு நேரிடாக் காவலாம்
ஊறு நேருமே ஆட்சியர்
ஏறும் ஏணியை எத்துதல்!
137. - கவிஞர் ப. தங்கவேல், காளியப்பனூர்.

கள்ளும் சூதுமே தீதெனத்
தெள்ளு தீந்தமிழ் தந்தநம்
வள்ளு வத்தினில் கற்றநாம்
கொள்ளல் நல்லதே அல்லவா?
138. - ச. தேன்மொழி சண்முகம், கருவூர்.

கொள்வீர் நன்னடை, நற்செயல்!
சொல்வீர் செய்வதை, உண்மையை!
செல்வீர் நல்வழி, நேர்வழி!
வெல்வீர் ஏற்றிட, போற்றிட!
139. - தா. அன்புவாணன் வெற்றிச்செல்வி,
காஞ்சிபுரம்.

கல்வி கற்பது மட்டுமே
நல்கும் வாழ்வென எண்ணிடீர்!
பல்கும் பட்டறி வேநமை
வெல்ல வைத்திடும்! எண்ணுவீர்!
140. - பு. சித்திரா, கருவூர்.

தாயைத் தாழ்ந்தவள் என்பவன்,
பேயை வாழ்த்திடும் பேயவன்;
காயைத் தின்றுயிர் வாழ்பவன்;
நோயில் வீழ்பவன் நாளுமே!
141.- புலவர் அ. பொன்னையன், புலிகரம்பலூர்.

வாய்ச்சொல் சொல்வது போலவே
போய்ச்செய் கின்றவர் யாருளர்?
தாய்ச்சொல் தானென எண்ணியே
போய்ச்செய் கின்றவர் மேலவர்.
142. - செ.அ. கார்க்குழலி, ஓடாக்கநல்லூர்.

படிப்பகம்

www.padippakam.com



வெற்றி பெற்றிடு வோன்பலர்
பற்றி நின்றிடும் தோதினன்;
கற்றுக் கல்வியும் தேர்ந்தவன்;
வற்றி டாதற வாணனே!
143. - இலெ. அ. அகத்தியன், சிறுமிளை.

முச்சீர் நான்கடிப் பாடலி(ல்)
இச்சீர் இஃதெனக் கண்டிட
மெச்சும் நற்பொருள் கொண்டதாய்
இச்சை தீரவே கூறுவேன்.
144. - ப. பிரபாவதி, புதுவை.

என்றும் தூய்தமிழ்த் தாயினை
நன்று காப்பவன் நீயென
ஒன்றி நின்றனம் ஓ!உனின்
நன்றி கொல்நிலை நாணதரும்!
145. - புகழன், அப்பூர் அகரம்.

ஏட்டில் தூய்தமிழ் ஏற்றிலார்!
பாட்டில் தூய்தமிழ் போற்றிலார்!
பூட்சி புன்புனை வென்சொல
மீட்சி செய்பவர் போலவே!
146. - விழுப்பைவேல், விழுப்புரம்.

ஆழ்ந்தே எண்ணிடும் எண்ணமே
வாழ்வின் வாய்ப்பதும் என்பதாம்
சூழும் வெற்றிகள் யாவுமே
ஊழின் ஊழதால் வந்ததாம்.
147. - சே. நிலவு, சென்னை.

சூழும் இன்னலை வென்றிடு!
நாளும் ஊக்கமாய் நின்றிடு!
காலம் வந்திடும் காத்திடு!
ஞாலம் போற்றிட வாழ்ந்திடு!
148. - கவிஞர். வேங்கடவரதன், பனங்குப்பம்.

துன்பம் வந்திடும் போதுதான்
உன்றன் ஞாபகம் வந்திடும்
உன்னை நம்பின யாவரும்
இன்பம் கொள்ளவை கந்தனே!
149. - ப.வே. வரலட்சுமி, கூட்டேரிப்பட்டு.

கற்ற கல்வியைப் போற்றியே
பெற்ற மண்ணிலே வாழ்ந்திடு!
மற்ற நாளினை எண்ணியே
இற்றை நாளினை வென்றிடு!
150. - மு. சக்தி, சென்னை.

பூக்கள் பூத்தலும் வானிகர்
பாக்கள் யாத்தலும் நேர்மையாய்
நாக்கைக் காத்தலும் தேவையே
ஈக்கள் வாழ்வது தேவையா?
151. - வீ. வில்வநாதன், வெங்காலூர்.

என்னுள் நன்மொழி தந்தவள்
அன்பில் தோன்றிட வந்தவள்
அன்பைக் காட்டியே வாழ்பவள்
என்றும் சக்தியாய்ப் பாரிலே.
152. - செ. சீலாதேவி, செஞ்சிக்கோட்டை.

கண்போல் தாய்மொழி காத்திடப்
பொன்போல் நாமெலாம் போற்றிட
மண்ணில் நாளுமே பூத்திட
என்றும் நற்றமிழ் வாழ்கவே!
153. - சா. சாகிதா, தி.கொ.அ.க.கல்லூரி.

சொல்லால் சொல்லிடல் வேண்டுமோ?
சொல்லின் தாக்கமே போதுமே
வில்லின் வேகமாய்ச் சொல்லின்
செல்க என்பதே உட்பொருள்.
154. - மா. மணிவண்ணன், திண்டிவனம்.

பெண்ணும் கண்ணுமாய்ப் போற்றிடும்
எண்ணும் சொல்லுமாய் நின்றிடும்
விண்ணின் ஆற்றலாய்ச் சீருறும்
கண்ணில் நின்றிடும் பாரதம்.
155. - மைமுன்னிசா, அப்பம்பட்டு.

சட்டம் கற்றிடும் நண்பரே!
பட்டம் பெற்றிடல் போதுமோ?
திட்டம் தீட்டிடல் வேண்டுமே!
கொட்டம் போக்கிடல் நல்லதே!
156. - தி. தமிழ்க்கொடி, புதுவை.

செம்மை கொண்டிடு நற்றமிழ்
எம்மை வாழ்ந்திடச் செய்தலால்
இம்மை வாழ்விலும் எம்மனோர்
மும்மை போற்றிடப் பாடுவர்.
157. - தி. மணிமேகலை, சென்னை.

தெங்கின் செவ்விள நீரெனப்
பொங்கி வந்தெனைக் காத்திட
எங்கள் தோழமை என்றுமே
தங்கம் போலவே மின்னுமாம்.
158. - பா. சத்தியா, பனையபுரம்.

www.padippakam.com



தேடி முத்தமிழ் கற்றிடு!
நாடி நாளுமே சொல்லிடு!
கூடி ஓர்பணி செய்திடு!
ஆடிப் பாடியே போற்றிடு!
159. - செ. சுபத்ரா, செஞ்சிக்கோட்டை.

செஞ்சொல் செந்தமிழ் நற்றமிழ்
நெஞ்சம் தங்கிடும் தண்டமிழ்
தஞ்சம் தந்திடும் முத்தமிழ்
கொஞ்சும் இன்பமே தீந்தமிழ்!
160. - செ. பொன்னம்மாள், செஞ்சிக்கோட்டை.

முல்லை சூடிய அல்லியே!
தொல்லை தந்திடும் கிள்ளையே!
அள்ளிச் சூடிட ஆர்வமே!
கொள்ளை போனதென் நல்மனம்!
161. - சி. பிச்சைமணி, மயிலாடுதுறை.

வந்தாள் நெஞ்சிலே தேவதை
தந்தாள் இன்பமே பைங்கிளி
அந்த மெல்லிய பூங்கொடி
சிந்தும் புன்னகை வைரமே!
162. - கவிஞர் கண்மணி, குடந்தை.

எண்கள் செய்திடும் எந்திரம்
விண்ணில் சாதனை செய்குதே!
மண்ணில் சோதனை போடுதே!
கண்ணாய்ப் போற்றுவோம் எண்களை!
163. - மு. செந்தில்குமார், செஞ்சிக்கோட்டை,

கள்ள வாக்கினால் வென்றிடல்
உள்ளம் அற்றவர் செய்திடும்
கள்ளம் என்றிடல் குற்றமோ?
துள்ளல் கொண்டிரு தள்ளிட!
164. - ச. பாசுகரன், இரிசிவந்தியம்.

ஈதல் ஈதலில் இன்பமும்
காதல் காதலில் உய்த்தலும்
மோதல் மோதலில் மாய்தலும்
ஆதல் ஆண்டகை மாண்பெனல்.
165. - தி. கதிரவன், திருவாமாத்தூர்.

மண்ணின் மைந்தனே நீயெழு!
உன்னின் தாய்த்தமிழ் நீதொழு!
அன்பின் பாதையில் சென்றிடு!
இன்னல் யாவையும் வென்றிடு!
166. - கி. தசரதராமன், கடலி.

பட்டுப் போன்றஉன் நெஞ்சினைத்
தொட்டுப் பார்க்கநான் எண்ணினேன்
விட்டுப் போயினை என்னையே
வெட்டி யாகநான் வாழ்வதோ?
167. - அமுதன், விழுப்புரம்.

முல்லை பூக்குமுன் வாயிலே
துள்ளும் மீனுமுன் கண்ணிலே
அள்ளும் பேரெழில் உன்னிலே
கொள்ளை போகுதென் நெஞ்சமே!
168. - பா. செல்வம், கோலியனூர்.

பள்ளம் மேடுறச் செய்வதும்
கள்ளம் வேரறச் செய்வதும்
இல்லம் மாண்புறச் செய்வதும்
நல்ல ஆட்சியின் நோக்கதாம்!
169. - வீ. சேகர், பழைய கருவாட்சி.

நல்ல தொன்றையே எண்ணிடின்
நல்ல தொன்றையே சொல்லிடின்
நல்ல தொன்றையே செய்திடின்
நல்ல துன்னையே நாடுமே!
170. - அழகு நிலவு, பனங்குப்பம்.

சங்கம் கண்டநம் முத்தமிழ்
பொங்கிப் பூத்தநம் புத்தமிழ்
மங்கித் தாழ்வுறல் காண்பதோ?
பொங்கிப் போரிட ஏகுவோம்!
171. - அர. நதியா, பனமலைப்பேட்டை.

என்றும் போற்றுவேன் நட்பினை
என்றும் வாழ்த்துவேன் தோழியை
இன்னும் என்மனம் கேட்குதே
என்றோ உன்னைநான் காண்பது?
172. - இ. சுபலெட்சுமி, நகரப்பாடி.

இன்பம் தந்திடும் நண்பனே
என்றும் உன்னையே போற்றுவேன்
துன்பம் தந்திடும் நாட்களே
என்றும் உம்மைநான் தூற்றுவேன்.
173. - தமிழ் புகழேந்தி, நகரப்பாடி.

அன்பில் வாழ்ந்திட எண்ணியே
இன்றும் வாழ்விலே நிற்கிறேன்
துன்பம் வாழ்வினில் நீங்கியே
என்றும் வாழ்ந்திடு வாழ்க்கையில்!
174. - தி. உருபன், மாரனோடை.

www.padippakam.com



அந்த நாளிலே பண்பினில்
வந்த நட்பறிந் தேன்நலம்
இந்த நாளிலே தன்னலம்
எந்தப் பண்பினில் மக்களோ!
175. - கு. அம்மச்சி, ஆத்தூர்.

உண்மை நட்பினை வேண்டினேன்
அண்டாப் பண்புடன் வந்ததே!
எண்ணம் சொல்செயல் சிந்தனை
எண்ணிப் பார்த்ததில் மாயமே!
176. - ஏ.தி. மோகனப்பிரியா, திண்டிவனம்.

சொல்லல் சொல்வழி நிற்றலால்
அல்லல் யாவுமே நீங்கிடும்
இல்லில் இன்னலும் இல்லதாம்
செல்வம் வந்துமை வாழ்த்துமே!
177. - தி. உசா, திருவாமாத்தூர்.

வீறு கொண்டிட நம்மினோர்
வேறு யாவரும் நிற்பரோ!
தேனும் பாரினில் நம்தமிழ்
ஊறும் நாவினில் நற்றமிழ்!
178. - பொ. கலைவாணி, சென்னை.

நாடு போற்றிடும் நற்றமிழ்
பீடு நாடொறும் பெற்றிட
வீடு யாவினும் வீறுடன்
தேடு சீரெனச் சேர்ப்பமே!
179. - திருக்குறள் நாவை. சிவம், மணற்பாறை.

நம்மின் தோழியே செம்மொழி
நம்பிக் கற்றிடு நல்லதாம்
உம்மைப் பாரினில் அம்மொழி
செம்மை நல்வழி உய்த்திடும்.
180. - கோ. செல்லம்மாள், செங்கம்.

இன்று காற்றினில் மாசுகள்
நன்றாய்ச் சேர்ந்ததால் மாந்தரின்
இன்ப வாழ்க்கையும் சோர்வுடன்
துன்பம் ஆனதே பாரினில்.
181. - நா. கிருட்டினவேலு, புதுவை.

கல்வி கற்றவர் போற்றிடச்
செல்வம் சேர்ந்திட வாழ்ந்திடு!
நல்லார் நின்புகழ் வாழ்த்துவர்!
பொல்லார் சூழ்பகை வீழ்த்திடு!
182. - பழனிபாரதி, புதுவை.

பெண்ணின் நெற்றியோ வான்மதி
கண்ணோ கானுள மான்விழி
பெண்ணின் கன்னமோ மாங்கனி
பெண்ணின் புன்னகை முத்தமிழ்!
183. - கலா விசு, புதுவை.

பெண்மை வாழ்ந்திடும் நாட்டினில்
உண்மை வென்றிடும் கண்ணென!
மண்ணின் மைந்தரின் நெஞ்சினில்
எண்ணம் காணுதல் வேண்டுமே!
184. - பா. சித்திரா, மதகடிப்பட்டு.

சங்கம் போற்றிய நந்தமிழ்
பொங்கும் சொல்வளம் சேர்த்திட
எங்கும் நற்றமிழ் வாழ்ந்திடும்
மங்கும் நம்மொழி ஓங்குமே!
185. - வ. பழனி, புதுவை.

ஏக்கம் தந்ததால் வாழ்விலே
தூக்கம் இன்றியே அல்லெலாம்
தாக்கப் பட்டவன் நானடி
ஆக்கும் தேவதை ஓடிவா!
186. - அ. செயராமன், சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

மாண்பு பெற்றவன் மாணவன்
வேண்டும் உள்ளமே தூய்மையாய்!
யாண்டும் ஊக்கமே பெற்றிடல்
வேண்டும் பாரதம் மாண்புற!
187. - அர. அருண்குமார், ஓசூர்.

ஞாலம் உன்னைதான் போற்றிட
நாளும் சாதனை செய்திடு
வேலை இன்றிநீ சுற்றினால்
கேலிப் பேசுவார் மக்களோ!
188. - இ. தாவிது பிரபாகர், பாவாணர் நகர்.

கச்சை வீக்கிய கண்கவர்
பச்சைச் சேலையின் பாவைகொல்
நச்சுத் தாமரை நாடியே
இச்சை கொள்ளுதல் இன்பமோ?
189. - இரா. சுதந்திரப்புலவன், சென்னை.

காவி ஆடையைக் கட்டியே
ஏவி விட்டுளான் குண்டரை!
பாவி தீக்கொலை பண்ணினான்!
தேவி காஞ்சியாள் தெய்வமா!
190. - புலவர் காரை இளங்கம்பன், புதுவை.

தாயே உன்னுயிர் என்னுடன்
தாயே உன்மனம் என்னுடன்
தாயே உன்செயல் என்னுடன்
ஆயின் என்மனம் யாருடன்?
191. - கோ. வெற்றிச்செல்வி, சென்னை.

படிப்பகம்

www.padippakam.com



ஆவி போனதும் ஆருடல்
சாவி ஆனது சார்ந்துளோர்
கூவி மாழ்கினார், அன்னரை
நீவி ஆற்றுநர் யாவரே?
192. - வே.ச. திருமாவளவன், சென்னை.

ஆடும் ஆந்தைகள் நாட்டியம்
பாடும் பைங்கிளி பண்ணுடன்
கூடும் காக்கைகள் பல்லியம்
நாடும் மந்திகள்! ஊரிலே!!
193.- புலவர் கோ. இளங்கோ பாண்டியன், புதுவை.

மன்னன் மன்பதை காத்திட
நன்மை நல்விதம் நேர்ந்திட
அன்னம் தந்திடு பாடமே
இன்பம் நல்கிடும் நன்னெறி!
194. - க. பாலமுருகன், பனையபுரம்.

நட்பின் நற்றிறன் பெற்றிடும்
நட்டல் போற்றிட வாழ்ந்திரும்
நட்பின் உன்னதம் போற்றிடின்
நட்பால் நாடுமே சீர்பெறும்!
195. - ந. கற்பகம், பனையபுரம்.

உண்மை காத்திடும் பாரினை!
திண்மை தந்திடும் நம்பகம்!
எண்ணம் தந்திடும் நன்னலம்!
வண்ணம் போலவே மின்னலாம்!
196. - க. உதயபாலன், பனையபுரம்.

கூர்மை ஆற்றலே கோபுரம்
ஆர்வம் கொள்ளலே வாழ்நெறி!
நேர்மை வாழ்விலே நிம்மதி
யார்க்கும் வேண்டுமே நேர்மதி!
197. - க. கார்த்திகேயன், பனையபுரம்.

காண்போம் ஒற்றுமை நாட்டிலே
மீண்டும் அல்லவை அற்றிட
யாண்டும் நம்மிடை வேண்டுமே
தூண்டு மாண்புறும் நல்லுளம்!
198. - கோ. சிவக்குமார், பனையபுரம்.

அன்பை போற்றிடு தாயென,
துன்பம் நீக்கிடு யாங்கணும்,
இன்பம் சேர்ந்திடும் பார்மிசை
நன்றாய் வாழ்ந்திடு நாட்டிலே!
199. - சோ. இளஞ்செழியன், புதுவை.

அல்லல் யாவுமே நீங்கிடும்,
இல்லம் நன்றென மாறிடும்,
செல்வம் குன்றெனச் சேர்ந்திடும்,
கல்வி கற்றிடின், தோழியே!
200. - சோ. கனிமொழி, புதுவை.

கூடி வாழ்ந்திடின் நன்மையே!
நாடி கற்றிடின் வெற்றியே!
தேடி சேர்ந்திடின் செல்வமே!
பாடி வென்றிடின் இன்பமே!
201. - ஆ. அறிவரசன், புதுவை.

பண்ணில் மீட்டிடும் பாவினை
விண்ணில் பாய்ந்திடும் சிட்டினை
மண்ணில் பூத்திடும் பூவினை
எண்ணில் நெஞ்சிலோ ரின்பமே!
202. - சோ. அருமை சுந்தரி, புதுவை.

பெற்ற அன்னையை என்றுமே
பற்றுக் கொண்டுநீ போற்றுவாய்!
கற்ற கல்வியும் அன்னையே
விற்று வாழநீ பிள்ளையா?
203. - சா.இரெ. கலைச்செல்வி, தி.கொ.அ.க.கல்லூரி.

தாயாய் என்றுமே உன்னையே
சேயாய் நாங்களே போற்றுவோம்
பேயாய் என்உளம் பற்றுமே
தாயே! என்தமிழ் அன்னையே!
204. - இரெ. சக்தி வடிவேல், திருமுட்டம்.

தன்னை வெட்டிடு பாவியும்
தன்னி ழற்கணே தங்கிட
நன்னி ழல்மரம் நல்கிடும்
இன்ன பண்பெமக் கெய்துமோ?
205. - பேரா. கி. சிவகுமார், விருத்தாசலம்.

கல்லா மாந்தரும் கற்றிட
இல்லார் வாழ்வையே ஏற்றிட
பொல்லார் மாறியே வாழ்ந்திட
நல்ல தொண்டினைச் செய்திடு!
206. - புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

தொண்டர் என்பவர் தூயவர்
கொண்ட கொள்கையில் நிற்பவர்!
மண்டு தீமைகள் செய்திடும்
குண்ட ரென்பவர் தொண்டரோ?
207. - சா. கண்ணன், புதுவை.

கற்க ஆங்கிலம் என்றிடும்
கற்று தேர்ந்தவர் யாவரும்
முற்றும் ஆந்திர கேரளர்
நிற்கும் வீதியில் நம்மினம்.
208. - புதுவை. தமிழ்நெஞ்சன்.

தேக்க மின்றியே செந்தமிழ்
ஆக்க மாகவே வாழ்ந்திட
நீக்க வேண்டுமே ஆங்கிலம்
காக்க வாழ்ந்திடும் செந்தமிழ்.
209. - புதுவை பெ. குமாரி.

www.padippakam.com



# செந்தமிழ் வளர்க்கும் செய்திகள்

✤ **புதுச்சேரியில் தமிழிலக்கிய மின்னிதழ் தொடக்க விழா :** தி.ஆ. உ0ங்கூ மீனம் கச ஆம் நாள் ஞாயிறு (27-3-2005) முத்தியால்பேட்டை ஆறுமுகா திருமண நிலையத்தில், தமிழிலக்கிய மின்னிதழ் தொடக்க விழா கவிமாமணி இலந்தை சு. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்மாமணி மன்னர்மன்னன் தொடக்கவுரை ஆற்றினார். மின்னிதழின் பொறுப்பாளர் இராச. தியாகராசன் வரவேற்புரையும், தகவல் தொழில் நுட்ப இயக்குநர் வெ. பிரித்திவிராசு மின்னிதழை வெளியிட்டு வாழ்த்தினார். முனைவர் இரா. திருமுருகனார் உள்ளிட்ட தமிழறிஞர் பலர் கலந்து கொண்டனர். இணையத்தமிழ் இலக்கியம் என்ற பொருளில் பைந்தமிழ்ப்பாவலர் பலர் பதினாறு வரிகளில் மரபு வாழ்த்துப்பா வழங்கினர். மின்னிதழ்க்குறும்படம் 15 மணித்துளிகள் காட்டப் பெற்றது. மின்னிதழ்ப் பொறுப்பாசிரியர் புலவர் செ. இராமலிங்கன் ஏற்புரை வழங்கினார்.

✤ புதுச்சேரிக் கலைஇலக்கியப்பெருமன்றத்தின் சார்பில் 7-5-2005 இல் திலசையில் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டைக் கலியாணசுந்தரம் பவள விழா - கலை விழா திரு மு. கண்ணன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பவளவிழா மலர் தோழர் மு.கு. இராமன் தலைமையில் முதலமைச்சர் மாண்புமிகு ந. அரங்கசாமி வெளியிட்டார். தோழர் வ. பலராமன் தலைமையில் தோழர் தா. பாண்டியன், நடிகர் மணிவண்ணன், இயக்குநர் ஈசுவர், முனைவர் நா. இளங்கோ ஆகியோர் உரையாற்றினர்.

✤ **பேராசிரியர் சாலினி இளந்திரையனார் நினைவேந்தல் நிகழ்ச்சி** 14-5-2005 இல் சென்னைத் தேவநேயப்பாவாணர் நூலகத்தில் தலைநகர்த் தமிழ்ச்சங்கத்தால் நடத்தப் பெற்றது. தமிழ் மைய ஆட்சி மொழிக்கருத்தரங்கம், தமிழ்ச் செம்மொழி ஆணையிலுள்ள குறை நீக்கக் கோருதல், பேராசிரியர் சாலினியார் படத்திறப்பு தமிழ்ச் செம்மொழி ஆவணம் சாலினியார் நூல்கள் வெளியீடு என நிகழ்வுகள் வீறுடன் நடைபெற்றன. தமிழ் அறிஞர் பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

✤ **சேலம் ஊற்றுமலை சித்தர் பீடம் தவத்திரு சண்முகாநந்தா** அடிகளாருக்குப் பாராட்டுவிழாவை 15-5-2005 இல் சேலத்தில் உலகத் தமிழர் பண்பாட்டியக்கமும் பாவேந்தர் நண்பர் குழுவும் இணைந்து உலகத்தமிழர் இயக்கத் தலைவர் மு. அந்தாலனார் தலைமையில் நடத்தின. ஆங்கில மருத்துவரான தவத்திரு சண்முகாநந்த அடிகளார் தமிழமைப்புக்களின் வேண்டுகோளுக்கிணங்கச் சேலத்திற்கு மேற்கில் 300 அடி உயரத்தில் உள்ள ஊற்று மலையில் ஓரிலக்க உருபாய்ச் செலவில் தமிழ்த் தாய்ச்சிலையும் தமிழ்க்கூடமும் நாட்டுகிறார்கள். ஆவணித் திங்களில் திறப்பு விழா நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

✤ 21-5-2005இல் கதிர்காமம் அரசு நடுநிலைப் பள்ளியில் ஓவியர் அன்பழகனரால் உருவாக்கப்பட்ட ஓவியங்களின் **மண்ணை நோக்கி**

www.padippakam.com



என்னும் பெயரில் அமைந்த **ஓவியக்காட்சியை** திரு செயபால் அவர்கள் தலைமையில் புதுவை முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். பாவலர் சீனு. அரிமாப்பாண்டியன், வரவேற்புரையும் தலைமையாசிரியர் மாசிலா. வீரவேல், நற்றமிழ் ஆசிரியர் புலவர் மு. இறைவிழியன் ஆகியோர் வாழ்த்துரையும் திரு கு. இராமமூர்த்தி நன்றியுரையும் வழங்கினர்.

❖ புதுவைத் தமிழன்பர்கள் தமிழ்ப்பணி அறக்கட்டளையின் சார்பில் 12-5-2005 இல் திருவள்ளுவர் அ.பெ.மே.பள்ளியில் முனைவர் பட்ட ஆய்வாளர் திரு மா. அமுதன் அவர்கள் **"தொல்காப்பியர் உத்திகள் கடன் வாங்கப்பட்டவையா?"** என்ற தலைப்பில் சிறந்த ஆய்வுரை வழங்கினார்.

❖ **கரிநெய் (தார்) பூசும் போராட்டம் :** 23-5-2005 இல் தமிழில் எழுதப்படாத பெயர்ப்பலகைகள் மீது கரிநெய் பூசும் போராட்டம் புதுச்சேரியின் முதன்மையான நேரு சாலையில் தமிழ் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் நடந்தது. இப்போராட்டத்திற்குப் பொறிஞர் ந.மு தமிழ்மணி தலைமையேற்றார். பல்வேறு அமைப்பினரும் கலந்து கொண்ட இப்போராட்டத்தில் காவல்துறையால் சிறையிடப்பட்ட நூற்றைம்பது பெயரில் முனைவர் இரா. திருமுருகனாரும் புலவர் இறைவிழியனும் இடம் பெற்றனர்.

❖ **வெளியாரை வெளியேற்றுவோம் மண்ணின் மக்களுக்கே வேலை - பேரணி - மாநாடு :** 21-5-2005 இல் ஈரோடு கருங்கல் பாளையத்தில் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சி, தமிழக இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புக்களின் சார்பில் **வெளியாரை வெளியேற்றுவோம் மண்ணின் மக்களுக்கே வேலை** ஆகிய கொள்கை விளக்கப் பேரணியும் மாநாடும் சீரும்சிறப்புமாக நடைபெற்றன.

❖ 27-5-2005 இல் புதுச்சேரிச் சிறுவர் இலக்கியச் சிறகத்தின் சார்பில் புதுச்சேரியில் தமிழ்மாமணி புலவரேறு அரிமதி. தென்னகனாரின் 125-ஆவது நூலான **வெல்லும் தமிழியக்கம்** சிறப்பாக வெளியிடப்பெற்றது.

❖ 4-6-2005 இல் புதுச்சேரியில் திராவிடர் இயக்கச் சிற்றிதழான **'தெளிவு'** இதழின் இரண்டாமாண்டுத் தொடக்கவிழா சிறப்பாக நடைபெற்றது. பல்வேறு அமைப்பினரும் விழாவில் கலந்து கொண்டனர்.

❖ புதுச்சேரி அரசின் கலைபண்பாட்டுத்துறை, தஞ்சைத் தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவை இணைந்து 27, 28, 29-5-2005 ஆகிய நாட்களில் **புதுச்சேரிக் கலைவிழா - 2005-ஐ** காந்திதிடல், காலாப்பட்டு, மடுகரை, இந்திராநகர், தொண்டைமாநத்தம் ஆகிய இடங்களில் சிறப்பாக நடத்தின.

❖ புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் 1-6-2005 அறிவன் (புதன்) மாலையில் முனைவர் ப. மருதநாயகம் அவர்கள் **'உலகளாவிய ஒப்புநோக்கில் வள்ளுவம்'** என்ற பொருளில் சிறந்த ஆய்வுரை வழங்கினார்.

படிப்பகம்

www.padippakam.com



# தானம்

சொல்மூலம் : தா › தா+அனம் › தானம்

தா = தருகைக் கருத்து மூலவேர்

தா = தருக (புறம். 136 : 10-11)

தா = கொணர்ந்து தருக (புறம். 300 : 1)

தொல்காப்பிய வரைமுறை (தொல். சொல். 9 : 48-49)

தா+அனம் › தானம் = கொடை 'அனம்' - ஒரீறு!

(ஒ.நோ. மா+அனம் ›மானம்)

"தானம் தவம் இரண்டும் தங்கா" (குறள். 19:1)

"தவத்தொடு தானஞ் செய்வாரின் தலை" (குறள் 295 : 1,2)

(மே.கா. இறையனார் களவியல் உரை - 2)

"தா" என்னும் செந்தமிழ் மூலவொலி, தனி நெட்டொலியாக நிலைத்திருந்த அந்நிலையையே பின்பற்றி, மறைஆரியரும் பிசகாது வழக்கு மேற்கொண்டனர்.

தா(த) > Dā (Skt) = to give, bestow, grant, yield
> Do (Latin) = Grant, present, permit, allow, afford, offer

தானம்(த) >Dana (Skt) = the act of giving
> dōnātio (Latin) = a presenting, a donation

"ஈ, தா, கொடு வெனக் கிளக்கும்" (தொல்.... 92 - 30)

தொன்றுதொட்டு வழக்கில் வழங்கி வருதலும், அடிப்படையைச் சேர்ந்த எளிய சொல்லாயிருத்தலும், சிறப்புப்பொருள் கொண்டு ஏனையிரு தூய தென்சொற்களுடன் தொடர்புடைமையும் "தா" என்பது, தமிழ்ச்சொல்லே என்பதற்குத் தக்க சான்றுகளாம். தரவு, தருகை, தரகு, தாரம், தானம் ஆகிய சொற்களெல்லாம் 'தா' என்னும் முதனிலை யினின்று திரிந்தவையே! இனி, 'தா' என்னும் வினைச்சொல் படர்க்கையிடத்தில் வராதென்று விலக்கப்பட்டிருப்பதும், அது தமிழ்ச் சொல்லேயென்பதை உணர்த்தும்.

"தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை, முன்னிலை ஆயீரிடத்த" - தொல் - 512

"தமிழ், ஆரியத்திற்கும் மூலம் என்பதை நாட்டற்குத் "தா" என்னும் சொல் ஒன்றே போதிய சான்றாம்" என்பார் பாவாணர்.

(நன்றி - பாவாணர், அருளியார் நூல்கள்) - கேள்.

| விடுபட்ட பாடல் | வஞ்சி விருத்தம்-2 | தேமா+தேமா+கூவிளம் |
|---|---|---|

கோழி வாத்துக் கால்நடை
ஆழி ஒக்கும் நீர்நிலை
மேழி எல்லாம் உள்ளவர்
பாழி சூழ வாழலாம்!

- த. கருணைச்சாமி, தேனி.

www.padippakam.com



## பேராசிரியர் அ. பசுபதியாரின் மடல்

நற்றமிழ் விடையிதழ் முகப்பு எனக்கு வியப்பையும் இறும்பூதையும் ஒருங்கே ஊட்டியது. புலவர் அரங்க. நடராசனாரின் செறிவும் சந்தமும் அரிய பொருளும் இணைந்த சந்த விருத்தம் செவிநுகர் கனியாகவும் அறிவுக்கு உயர் பாவாகவும் இனித்தது. தங்கள் எண்ணத்துக்கும், கால்டுவெல் அடிகளாரை உரியமுறையில் போற்றும் தங்கள் இதழியற் கோட்பாட்டுக்கும் அரணாகத் திரு சுப. வீரபாண்டியன் அவர்கள் தன் அண்மை ஆய்வு நூலான 'பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம்" என்னும் சீரிய நூலில் மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ள பகுதியை இவண் தருகின்றேன் (பக்கம் : 41)

"தென்னிந்திய மொழிகளுள் தொன்மை மிகுந்ததும்
திருத்தம் பெற்றதும் ஆகிய மொழி
தமிழ்மொழியே. தென்னிந்திய மொழியினத்துக்குரிய
தனிச்சிறப்புகளையும்,
அடிப்படையமைப்புக்களையும்
உரிமையோடு கொண்டியங்குவதும்
தமிழ்மொழியே!"

என்னும் கால்டுவெலார் கூற்றைப் பற்றிக்கொண்டே ஆந்திர, கேரள, கருநாடகத்தினர் இன்று தமிழ் எங்கள் மொழிகளுக்கெல்லாம் தாய் அல்லள் என்றும், எங்கள் மொழிகளுடன் பிறந்த மொழியே என்றும் கூறிவருகின்றனர் எனவும் சுப.வீ. கருத்துரைத்திருப்பதும் நாம் நம் கவனத்தில் இருத்தவேண்டிய செய்தியாகும்.

நூற்கடல் ஐயா அவர்கள் சிந்தாமணியில் மூழ்கி, பெருங்கதை உவமங்களைக் காட்டியிருப்பதும், முனைவர் ப. மருதநாயகம் அவர்கள் "நீதிகளைப் பட்டியல்களாகத் தராமல், அவற்றை ஒரே வகையில் சொல்லாமல், ஒருவகையான உவமைகளையே மீண்டும் மீண்டும் பயன்படுத்தாமல் பலவாறு கவிதைப்படுத்தும் முயற்சிகளாக நீதிநூல்கள் (பதினெண் கீழ்க்கணக்கு) அமைந்திருக்கின்றன" என்று அரிஃச்டாட்டிலைத் தொட்டிருப்பதும் சிந்தனைக்கு விருந்தாயின.

அமெரிக்கத் தமிழ் மருத்துவ ஆர்வலர் சாமுவேல் குறித்து 'இராணி' கிழமையிதழிலிருந்து தாங்கள் எடுத்துத் தந்திருப்பது, அவ்விதழைத் தொடர்ந்து வாசிக்க இயலாதவர்க்கு நல்வாய்ப்பு ஆகும்.

நற்றமிழில் தொடர்ந்து நாடாளுமன்ற மக்களவை போல (நல்ல முறையில் சொல்கிறேன்!) இடம்பெறும் கொடுத்தபடி தொடுத்த பாடல்களில் பதின்பருவம் நிறையும் அகவையுடைய இளைஞர் இளைஞியர் முதல் ஆயிரம்பிறை காணப்போகும் மூத்த தமிழ்ப் பாவல்லார் வரையிலுள்ளவர்கள் பங்கேற்க (தொடர்ந்து) ஆர்வம் உறுவது - ஆரவாரம் இன்றித் தமிழ் மரபுப்பாவின் சீர்மையை ஒர்மையுடன் நின்று நிலவச் செய்யும் அருஞ்செயல். இது வரலாறு காணும். எக்கரணியங்கொண்டும் இப்பகுதியை இறுக்கவோ நிறுத்தவோ வேண்டா என வேண்டுகின்றேன்.

www.padippakam.com



# நூல்-அறிமுகம்

**"தேன் கதைகள்"** - ஆசிரியர்: **க. தமிழமல்லன்;** வெளியீடு : தனித்தமிழ்ப் பதிப்பகம், 64, மாரியம்மன் கோயில் தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009. விலை : உ௫50/-

சிறுவர்கள் படித்து மகிழும் வண்ணம் மிக அருமையான சிறுகதைகள் "ஆறுமுகத்தின் அலறல்" தொடங்கி "நாளைக்கு வருவேன்" ஈறாகப் பதினான்கு கதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

மாணவச் சிறுவர்களுக்கும், நம் குடியரசு தலைவர் அப்துல் கலாமுக்கும் உள்ள தொடர்புகளைச் சிறுவர் படித்து இன்புறும் வகையில் "பிரியா விடை" என்னும் கதையில் கூறியிருப்பதும் பிற்காலப் புலவர்களான காளமேகத்துக்கும் அதிமதுரக்கவிஞருக்கும் உள்ள கருத்து வேறுபாட்டையும், பண்புகளையும், மாணவர்களுக்கு விளக்கும் பொருட்டு ஒட்டக்கூத்தரின் செருக்கையும், கம்பரின் சிறப்பையும் சிறுகதையாக்கிக் "கம்பர்" எனும் சிறுகதையில் கூறியிருக்கும் பாங்கும் நூலாசிரியர் க. தமிழமல்லனைப் பாராட்டும்படியுள்ளன. இந்நூலில் உள்ள அனைத்துக் கதைகளையும் சிறப்பாகப் படைத்துள்ளார் நூலாசிரியர். கதைகளுக்கேற்ப திருக்குறளை ஆங்காங்கே கூறி விளக்கிஇருக்கும் முறை இந்நூலுக்குப் பெருமைசேர்க்கிறது. சிறுவர்களுக்கு இந்நூலைப் பரிசாக வழங்குவது பயன்தரும் செயலாகும்.

**"வெற்றிக்கு ஒரு முற்றுகை"; ஆசிரியர் : கவிவேந்தர் கா. வேழவேந்தன்;** வெளியீடு : வேந்தர் பதிப்பகம், 78,103, இராதாகிருட்டினன் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004; விலை : உரு. 60/-

இந்நூலில் "நேயமெனும் தூயபண்பு" தொடங்கி "முகமும் முகவரியும் குறளே" ஈறாக இனிய நண்பர்க்கு 25 அன்பு மடல்களை அருமையான படைப்பாக்கி அளித்திருக்கிறார் கவிவேந்தர் கா. வேழவேந்தனார். நூலின் தலைப்புகளே படிப்பதற்கு நம்மைத் தூண்டும்.

ஒவ்வொரு மடலிலும் வெற்றி எய்துதற்குரிய இனிய செய்திகளைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் தலைப்புக்கேற்ப விளக்கியிருக்கும் பாங்கும், இனிமை தரும் தமிழமுதத்தில் திருக்குறள் தேனைக் கலந்து கலந்து சுவைத்திட விருந்து படைத்திருக்கும் முறையும் கவிவேந்தரின் அறிவாற்றலை எடுத்துக்காட்டுகின்றன. உலக அறிஞர்களின் உயர்ந்த கருத்துக்களைத் தமிழ்த் திருநாடு தந்த தகைசால் சான்றோர் கருத்துக்களுடன் இணைத்திணைத்து புதையலாகவும் அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறார், இந்நூலில் கவிவேந்தர். இனிய தமிழன்பர்கள் இம் மடல்நூலைப் படித்துணர்ந்து இன்புற்ற உணர்வுகளை மடலாக எழுதி, நூலாசிரியர் கா. வேழவேந்தனார்க்கு விடுக்கலாம்.

**- புலவர். செ. இராமலிங்கன்.**

www.padippakam.com



# தொடுத்தலும் விடுத்தலும்

**வினா-1 :** புதன் + கிழமை = புதன்கிழமை என்று புணர்வது வியாழன் + கிழமை = வியாழன்கிழமை என வராமல் வியாழக்கிழமை என எழுதப்படுவதேன்? என்னவிதி? **- பாச்சுடர் வளவ. துரையன், கடலூர்.**

**விடை-1 :** வியாழம் - என்ற சொல்லே புராணங்களில் பெரு வழக்காக உள்ளது. வியாழன் என்பதும் அகரமுதலியில் இடம் பெற்றுள்ளது. மலையாள மொழியில் வியாழம் என்பதே நாட்பெயராக ஆளப்பட்டு வருகிறது.

எனவே வியாழம் + கிழமை = வியாழக்கிழமை என்பதே சரியானது. வியாழன் + கிழமை = வியாழன்கிழமை என எழுதுதலே முறையாகும்.

**வினா-2 :** தமிழ் மொழியில் வாய் உண்டு; முகம் இல்லை. வடமொழியில் முகம் உண்டு; வாய் இல்லை என்னும் கருத்துப் பலராலும் கூறப்பட்டு வருகிறது. இதில் உள்ள உண்மையை விளக்க வேண்டுகிறேன். **- ப. அன்பழகன், விழுப்புரம்.**

**விடை-2 :** இக்கருத்து நெடுங்காலமாக உலவி வருகிறது. சிவனால் அருளப்பட்டு அகத்தியரால் தென்னாட்டில் உலவவிட்ட மொழியே தமிழ் என்னும் புராண பொய்க்கதையைப் போன்றதே இஃதும். திடீரென ஒருவரால் ஒருமொழியை உருவாக்க முடியாதென்பது மொழியியலறிஞர் உணர்த்தும் உண்மை. அவ்வாறு உருவாக்கப்பட்டிருப்பின், அது செயற்கை மொழியாகும். தமிழ் இயற்கை மொழி. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மக்களால் உருவாக்கப்பட்ட மொழி.

முகம் என்ற சொல்லுக்கு முப்பதுக்கு மேற்பட்ட பொருளும் முகத்துடன் சேர்ந்த தொடர்களாக அறுபதுக்கு மேற்பட்ட தொடர்களும் அகரமுதலிகளில் இடம் பெற்றுள்ளன.

வாய் இருக்கிறதாம். பல், இதழ், மூக்கு, விழி, இமை, நெற்றி எல்லாம் இருக்கின்றன. இவை இடம் பெற்ற முகம் இல்லையாம். இது போன்ற நகைப்புக்குரிய அடிப்படையற்ற செய்திகள் தமிழின் பெருமையை அழித்தற்காகச் சமற்கிருதப் பற்றாளர்களாலும் அடிமைகளாலும் பல்லாண்டுகளாகக் கூறப்படுகின்றன.

**வினா-3 :** 15-05-2005 நற்றமிழ் இதழில் மே மாதம் 15-ஆம் நாள் முதல் 22ஆம் நாள் வரையில் சிறப்பாக நடைபெற்றது என்று உள்ளது. நடைபெறுகிறது என்று இருத்தல் வேண்டும். இப்படி ஒரு மொழி நடை எப்படி நற்றமிழில் இடம் பெற்றது. எப்படி இந்த இலக்கணப்பிழையைப் பொறுக்க முடியும்? **- வழக்குரைஞர் க.வே. மகாராசன், கருங்குளம்.**

விடை-3 : 15-05-2005 நாள் வெளியான நற்றமிழ் இதழில் 22-05-2005ஆம் நாள் வரையில் நடக்கின்ற விழாவினை நடைபெறுகிறது என நிகழ்காலத்தில் எழுதாமல் நடைபெற்றது என இறந்த காலத்தில் எழுதியது ஏன் என்பதே வினா. மேலோட்டமாகப் பார்க்குங்கால் வினா உண்மையானது என்றே தோன்றலாம். இப்பொழுது மீண்டும் அச்செய்தியைப் படித்துப் பார்த்தால் பொருள் சரியாக இருக்கும்.

www.padippakam.com



இனிமேல் எப்பொழுது படித்தாலும் அவ்விழா நடந்த காலம் கடந்த காலமாகவே இருக்கும். பொருளும் சரியாக இருக்கும். ஏனெனில் நிகழ்காலம் என்பது குறுகியது; கடந்த காலம் நீண்டுகொண்டே போகிறது. இவ்வாறு எழுதுதல் எழுத்தாளர் மரபு; பிழையன்று.

## பாவை. நடவரசன் மடல்

இருள் விலக்கும் ஒளிவிளக்காய் நற்றமிழ் ஒளிர்கிறது. அது தமிழுக்குத் தொண்டு செய்த தக்காரைப் போற்றிப் புகழ்கிறது. இதழ்களுக் கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டியாகும்.

150 ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் மருத்துவப் படிப்பு நடத்தி, வழிகாட்டிய மருத்துவர் திரு. பச்சையப்பன் அவர்களைப் பற்றிப் படித்துப் பெருமிதங்கொண்டேன். தமிழால் முடியும்! என்பதற்குப் பச்சையப்பன் ஓர் எடுத்துக்காட்டு ஆவார்.

நம் குடியரசு தலைவர் மேதகு. அப்துல்கலாம் அவர்கள் படிக்கின்ற காலத்திலேயே தமிழால் முடியும் என்பதைத் தமிழில் அறிவியல் கட்டுரை, எழுதிப் பரிசும் பெற்றார். அந்த நிகழ்ச்சியை "அக்னி சிறகுகள்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளதைப் பாருங்கள்.

"எனது தாய்மொழி தமிழின் தொன்மையில் பெருமிதப்படுகிறேன். இராமாயண காலத்திற்கு முந்தைய அகத்திய முனிவர் காலத்திலேயே தமிழ் செழித்திருந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பே அதன் இலக்கியங்கள் பிறந்திருந்தன. இந்த அருமையான மொழிக்கு அறிவியல் அன்னியப்பட்டுவிடக் கூடாது என்பதில் நான் குறியாய் இருந்தேன். 'நமது சொந்த விமானத்தை நாமே உருவாக்குவோம் என்ற கட்டுரையைத் தமிழில் எழுதினேன்' போட்டியில் முதல் பரிசும் கிடைத்தது"

நம் குடியரசு தலைவர் அவர்கள் தம்மால் முடியும் என எழுதியும் செயல்பட்டும் வழிகாட்டியிருக்கின்றார். அவர்தம் விடாமுயற்சியை அருந்தமிழ் இளைஞர்கள் பின்பற்றித் தமிழுக்குத் தொண்டாற்றிட வேண்டும்! அறிவியலில் தமிழ் ஒளிர்தல் வேண்டும்!

## பாடல் படைத்திடுக

**வஞ்சி விருத்தம் - 3**

இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கண்ணினாய்

(யா.அ.க.மேற்கோள்)

ஒவ்வோரடியிலும் மூன்று சீர்களைக் கொண்டு நான்கடிகள் ஓரெதுகையில் அமைந்திருப்பது வஞ்சி விருத்தம் எனப்படும்.

1. ஒவ்வோரடியிலும் மூன்று சீர்கள் இருக்க வேண்டும்.
2. ஓரடியின் சீரமைப்பு முறையே : **புளிமா+கூவிளம்+கூவிளம்**
3. இவ்வாறமைந்த நான்கடிகள் ஓரெதுகை பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறமைந்த பாடல் ஒன்றை விரும்பிய பொருளில் இயற்றி, வரும் 30-6-05 க்குள் விடுக்க.

- புலவர் அரங்க. நடராசன்

www.padippakam.com



# உள்ளமுள்ள மாந்தன்

**மறவன்,** மேட்டுப்பாளையம்.

கடற்கோளால் இன்னலுறும் மக்க ளுக்கு
அருளுந்த உதவுகின்றா ரவரைப் பார்த்துக்
கொடுப்பதிவர் விளம்பரத்திற் கென்று சொல்லிக்
கொச்சைமொழிப் பேசுகின்றார் வச்சை மாக்கள்
கொடுப்பவரைத் தடுக்கவரும் இவரைப் போன்ற
கொடியவர்கள் ஊர்ப்பழிக்கே அஞ்ச மாட்டார்
நெடுநாட்கள் ஓடாதே இவர்கள் வண்டி
நெஞ்சகத்தில் வஞ்சகத்தைச் சுமந்துகொண்டே

கைப்பொருளைத் தந்துபுகழ் பெறுகின் றாரைக்
கண்டுமனம் புழுங்குபவர் கயவ ராகும்
கைப்பெட்டி தந்திருந்தால் வாழ்த்திப் பேசிக்
கைத்தட்டி ஆரவாரம் செய்தி ருப்பார்
ஏய்ப்பவர்கள் ஊர்ப்பொருளை ஏப்பம் விட்டே
ஏன்பேச மாட்டார்கள் மட்டந் தட்டி?
காய்க்கின்ற மரத்திற்கே கல்ல டிதான்
கைம்மாறாய் தருவதுதான் உலகி யற்கை

இங்கிருக்கும் நடிகருக்கே உள்ள மில்லை
எடுத்துஒன்றைக் கொடுத்துதவி செய்ய வில்லை
எங்கெங்கும் அவலங்கள் உள்ள முள்ள
எவருக்கும் கண்ணீரை வரவ ழைக்க
எங்கிருந்தோ கண்டிதனை ஓடி வந்த
ஏற்றமிகு மாந்தனைஏன் தூற்று கின்றீர்?
பண்புடைமை யாகாதே கொடுப்பார் தம்மைப்
பழித்தறிக்கை விடுவதென்ன நாக ரிகம்?

அழுக்காறு நெஞ்சகத்தி லுள்ள வர்க்கே
அடுபகையே அதனைவிட வேறொன் றில்லை!
ஒழுக்கமிவர் நிழல்பட்டா லதுவே போதும்
ஓடிப்போய் தற்கொலையே செய்து கொள்ளும்
இழுக்கமெலாம் விழுப்புண்க ளென்றே ஏற்கும்
இயல்புடையார்க் கிவையெல்லா மிசையே யாகும்
விழிக்கின்றார் வாக்களித்த மக்க ளின்று
விடுதலைத்தான் தங்களுக்கே எப்போ தென்றே?

www.padippakam.com

AIR MAIL

நற்றமிழ்-திங்களிதழ்
NATRAMIZH-MONTHLY

பதிவு எண். புது.த.தி./2000/4265
Registration No. PONTAM / 2000 / 4265

அஞ்சல் உரிமம் : த.நா / அ.து.த 128 / 03-05. திங்கள் தோறும்
15 / 16ஆம் நாளில் நெல்லித்தோப்பு அஞ்சலகத்தில் சேர்க்கப்படுகிறது.
Postal registration : TN/PMG (CCR) 128/03-05. Posted
at NELLITHOPE POST OFFICE On 15th / 16th of Every Month.

**அச்சிட்ட நூல் அஞ்சல் - Printed Book Post**

**LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP
NO. SSP / PY / 83 / 03-05**

பெறுநர் :
திரு.

**N. MURALY**
Dysse garden - 24, T.V,
7500 Holstebro,
**Danmark.**







## வாழ்நாள் உறுப்பினர்

கலைமாமணி **கோவி. கலியபெருமாள்**
74, கடலூர்ச் சாலை, அரியாங்குப்பம்,
புதுச்சேரி – 605 007.

**நன்றி !** – ஆசிரியர்

## நற்றமிழ்

| | | |
|---|---|---|
| **தனி இதழ்க் கட்டணம்** | — உரு | **6.00** |
| **ஆண்டுக் கட்டணம்** | — உரு | **75.00** |
| **வெளிநாட்டு ஆண்டுக் கட்டணம்** | — உரு | **300.00** |
| **வாழ் நாள் கட்டணம்** | — உரு | **600.00** |

**முழுப் பக்க விளம்பரம் – உரு. 500.00**
**அரைப் பக்க விளம்பரம் – உரு. 300.00**

திரு. ந. இளம்பூரணன் அவர்கட்கு உரிமையான 17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம், புதுச்சேரி - 605 013. இல் உள்ள அகத்தியர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, நற்றமிழ் உரிமையாளரும் ஆசிரியருமான புலவர் மு. இறைவிழியனாரால் 43, அங்காடித் தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605 005. என்கிற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது. தொலைபேசி : (0413) 2203765

Printed by **N. Elampuranan,** Owner of the press and published by **M. Iraivizhiyan** on behalf of **M. Iraivizhiyan** and printed at AHATHYAR PRESS, 17, First Street, Rajaiyer Thottam, Pondicherry - 605 013. and published at 43, Market Street, Nellithope, Pondicherry - 605 005. Editor **M. Iraivizhiyan,** Telephone : (0413) 2203765

படிப்பகம்